Registered as a Newspaper பக்கங்கள் 14 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 01 (14-01-1994) வெள்ளிக்கிழமை ஓசை 330

## மலத்தியோனுக்குப் பதில் புதிய இரசாயனக் கலவை

மலேரியாவை ஒழிப்பதற்கென புதிய இரசாயன கலவையை சுகாதார திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது. தற்சமயம் உபயோகிக்கப்படும் மலத்தியோனிலும் பார்க்க புதிய 'ஐக்கோன்' எனும் மருந்துக் கலவை நுளம்புகளை ஒழிப்பதற்குப் பெரும் சக்தி வாய்ந்தவை என தெரிவிக்கப்படுகிறது. மலத்தியோனின் மணத்தைப் பலர் விரும்புவதில்லை. மரத்தளபாடங்களையும் இது பழுதடைய வைக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்வகையில் இப்புதிய மருந்து (14 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி கரையோரம் மீது அகோர பீரங்கித் தாக்குதல்

## ஒருமணி நேரம் நீடித்த தாக்குதலால் இரு வயோதிபர்கள் அதிர்ச்சி மரணம்

(வடமராட்சி)

வடமராட்சி கரையோரப் பகுதி மீது நேற்று சிறிலங்கா கடற்படைப் பீரங்கிக் கப்பலில் இருந்தும், படகுகளில் இருந்தும் அகோர பீரங்கித் தாக்குதலும், கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டன. சுமார் ஒருமணி நேரம் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது இரு வயோதிபர்கள் அதிர்ச்சியால் மரணமடைந்ததோடு ஐந்து பேர் பீரங்கித் தாக்குதலினால் காயமடைந்தனர். இத்தாக்குதலின் போது வைத்தியசாலைகள், வீடுகள், கட்டடங்கள் என்பனவும் சேதம் அடைந்தன.

வடமராட்சியில் மக்கள் குடியிருப்புக்கள்மீதும் கடலில் மீனவர்கள்மீதும் நேற்று சிறிலங்கா கடற்படையினர் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர். ஒரே நேரத்தில் கடற்பரப்பிலும் தரை நோக்கியும் மேற்கொண்ட மூர்க்கத்தனமான பீரங்கி, ஷெல், கலிபர் தாக்குதலின் போது இரண்டு வயோதிபர்கள் அதிர்ச்சியினால் மரணமடைந்தனர். ஐவர் காயமடைந்தனர். அரசினர் வைத்தியசாலைகள் உட்பட வீடுகள் கட்டடங்கள் பல சேதத்திற்குள்ளாகின.

வடமராட்சி வடக்குக் கடலிலும் கரையோரக் குடியிருப்புகள்மீதும் நேற்றுக் காலை 5 45 மணிமுதல் ஒரு மணித்தியாலமாக கடற்படையினர் ஓயாத தாக்குதலை மேற்கொண்டனர். முனை முதல் வல்வெட்டித்துறை ஈறாக இத்தாக்குதல் தொடர்ந்தது.

இக்கடற்பரப்பிலிருந்து ஒரே நேரத்தில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான 'வீரய சூரய' வுடன் இரண்டு 'டோறா' விசைப்படகுகளும் ஒன்றாக இணைந்து தாக்குதலில் ஈடுபட்டன. இத்தாக்குதலின்போது சற்கோட்டை வாசியான சுவாம்பிள்ளை பேர்னாட் (வயது70) என்பவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஏ. வேலுப்பிள்ளை (வயது 66) என்பவரும் அதிர்ச்சியினால் மரணமடைந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்குதலால் வல்வை ஆஸ்பத்திரி சேதம்

வல்வெட்டித்துறையில்கடற்படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை சேதமடைந்தது. வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியின் அலுவலக யன்னல்கண்ணாடி மற்றும் உட்பகுதிக் கட்டடங்களும் சேதமடைந்தன. பிரசவ வார்ட் கட்டடப் பகுதியின் மீது மேற்கொண்ட தாக்குதலின்போது கூரைப் பகுதி சேதமடைந்தது. கர்ப்பிணிகள் பாதுகாப்புக் கருதி வைத்தியசாலையை விட்டு வெளியேறினர். இவ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளியான ஏ. வேலுப்பிள்ளை என்பவர் அதிர்ச்சியினால் மரணமடைந்தவரில் ஒருவராவார். இவ் வைத்திய சாலையில் நேற்றுக் காலை நடைபெறவிருந்த பிரெஸர் கிளினிக்கிற்கு 50 நோயாளிகள் வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் மயிரிழையில் தப்பிக் கொண்டனர். ஊழியர்களும் மறைவிடங்களில் இருந்ததினால்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை சூட்டிற்கு மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டிப் பகுதியில் நேற்று மீனவர்கள் மீது சிறிலங்கா படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்

அதிகாலை இரண்டு மணியளவில் கடலில் மீன்பிடிக்கச் சென்றபோதே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதிகாலை 1-30 மணி முதல் 4-30 மணிவரை அப்பகுதியை நோக்கி இராணுவத்தினர் தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

## 'மாகோ' நாளை புறப்படும்

தற்போது பருத்தித்துறையில் உணவுப் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் 'மாகோ' கப்பல் நாளை சனிக்கிழமை 50பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்படவுள்ளது.

இக் கப்பல் திருமலையில் பயணிகளை இறக்கிவிட்டு அங்கிருந்து கொழும்பு சென்று டிசம்பர் மாதத்திற்குரிய 4500 பரல் மண்ணெண்ணெயும் ஏற்றிக் கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வரவுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## வடபகுதி வந்த 'றுகுணு' நடுவழியில் திரும்பியது

வடபகுதிக்கான உரம் மற்றும் செயலக திருத்தவேலைப் பொருள்களை ஏற்றிவந்த றுகுணு கப்பல் இடைவழியில் கடற்படையினரால் திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாலை கொழும்பிலிருந்து 800 மெற்றிக் தொன் உரம் மற்றும் யாழ். செயலக கட்டட திருத்தவேலைகளுக்கான கட்டடப் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு வந்த கப்பலையே கடற்படையினர் கொழும்பிற்கும் திருமலைக்குமிடையில் வைத்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதேவேளை இக்கப்பல் நேற்றுமாலை மீண்டும்கொழும்புதுறைமுகத்திலிருந்துபருத்தித்துறை நோக்கிபுறப்பட்டுள்ளதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.




## வடக்கு-கிழக்கு போரை முடிவுக்கு கொண்டுவருக

### கத்தோலிக்க ஆயர்கள் கோரிக்கை

(வத்திக்கான்)

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுவரும் மனிதாபிமானமற்ற போர் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என இலங்கையிலுள்ள கத்தோலிக்க ஆயர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து ஆயர்கள் சார்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மன்றத் தலைவரும், கொழும்புப் பேராயருமான மேதகு நீக்கஸ் மார்க்கஸ் பர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிஉருவாகவேண்டின் நாட்டிலேயே முயற்சிதேவை

### மலேசிய ஆயர் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

ஒரு நாட்டில் அமைதி உருவாக வேண்டுமானால் அந்நாட்டிற்குள் இருந்து அதற்கான முயற்சி எடுக்கப்படவேண்டும் என மலேசியாவின் கத்தோலிக்க ஆயர் மேதகு அன்ரனி செல்வநாயகம் கூறியுள்ளார்.

கடந்த வருடம் இவர் யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பது தெரிந்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 500 தபால் பொதிகளுடன் 'வாதுவ' 17-ல் புறப்படும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கான தபால் பொதிகளை ஏற்றிக்கொண்டு 'வாதுவ' கப்பல் 17 ஆம் திகதி கொழும்பில் இருந்து புறப்படும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தனியார் துறையினருக்கான பொருள்களே பெருமளவில் எடுத்துவரப்படவிருப்பதுடன் யாழ். போதனா வைத்திய சாலைக்கான மருந்துப் பொருள்களும் எடுத்துவரப்படவுள்ளன. அத்துடன் 500 தபாற் பொதிகளும் ஏற்றி வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ். குடாநாட்டிற்கான மா, சீனி உட்பட அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கோமாரி கப்பல்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வியாபாரிகட்கு

பாடசாலை பாக்குகள், உபகரணங்கள், தரமானஇமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள், மணப் பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல்வகைகள்அழகுசாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள—ஜெயா அழகு சாதனமாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8366)

### விற்பனைக்கு

YAMAHA 2000(2KV) ஜெனரேற்றரும் BRIGGS &STRATTON நீர் இறைக்கும் இயந்திரமும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: யூட் போட்டோ, 51-4 ஆம் குறுக்கு வீதி, சின்னக் கடை.

(சி 8380)

### கொம்பியூட்டர் வகுப்புக்கள்

CSA ஆரம்பம் 4 மாத BASIC Programming 15-1-94 காலை 8.30 மணி 7 மாத Data processing and BASIC Programming 18-1-94 காலை 8.30 மணி Computer Science Academy, Navalady Lane, Thirunelvely.

(சி-8379)

### உணவு சேவை
### யாழ்நகர்

மதிய உணவு- மீன், இறைச்சி, மரக்கறி (11. 30- 2.00) சூப்வகை- மரக்கறி மாமிசம் விசேஷ உணவு- புரியாணி, நூடில்ஸ், பிறைட் றைபிஸ் பரிமாறும் சேவை வழங்கப்படும் ஓடர்களுக்கு நாடவேண்டிய முகவரி ''காருண்ணியா சையிவிஸ் ஹொட்டேல்'' 166B, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்,

(7168)

### திருமண சேவை

மணமக்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்- அம்பாள் திருமண சேவை- இல-22- ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு- வாடிக்கையாளர்களுக்கு எமது பொங்கல் வாழ்த்துக்கள்-

(7225)

### விற்பனையாகிறது

11-2-94-ல் ''விண்ணில் சனி மாற்றம் மண்ணில் உங்கள் யோகபலன்'' - சோதிடர் V. A- சிவராசா, 152B, அரசடி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(7224)

**யூதர்கள்**

யில் காலூன்றாவிட்டால்- எவ்வளவுதான் உலகத் தலைவர்களோடு கொஞ்சிக்குலாவினாலும் சொந்த மக்கள் மனங்களை வெல்ல முடியாவிட்டால் என்னவாகும் என்பதற்கு இப்போது அரபாத் உதாரணமாகிறார். அதே வேளை எவ்வளவு தான் புற அழுத்தங்கள் கொடுக்கப்பட்டாலும் எதிர்ப்புக்கள் காட்டப்பட்டாலும் சொந்தமண்ணில் வேரோடி சொந்தமக்களின் உறுதியானஆதரவைப் பெற்றோரை எவரும் எதுவும் செய்ய முடியாது என்பதற்கு எமது தலைமை தக்க உதாரணம் அல்லவா?

**கொதிப்பு**

வத்தில் ஒருவனின் தலை சிதறிப்போக, அவன் கீழே விழுகின்றான்.

''அனுசியா''

என்றவாறு கனகசுந்தரம் அவளைப்போய்த் தூக்கினான். அவனின்பிடியிலிருந்து அனுசியா-

''உவங்கள் தான் என்ரை அம்மாவைக் கொன்றவங்கள்... உவங்கள்தான் என்ரை அம்மாவைக் கொன்றவங்கள்... என்னை விடுங்கோ- உவங்களை அழிக்கவேணும்... உவங்களை அழிக்க வேணும்...''

என்று வெறிபிடித்தவள் போல் அனுசியா கத்தினாள் கத்திக்கொண்டே இருந்தாள்.

## தேவை

வரை படங்களை நேர்த்தியாக கீறக்கூடியவர்களும் | கட்டட மாதிரி உருவமைக்கக் கூடியவர்களும் உடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தில் தராதரம், அனுபவம் என்பவற்றை குறிப்பிடவும்

விளம்பர இல. 306
மே|பா: ஈழநாதம்

(சி| 8377)

அனைத்துலகப் பெண்கள்நாளை முன்னிட்டு
விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப்போட்டிகளை நடாத்த விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்தவகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:-

- படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.
- கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்க வேண்டும். ஓவியங்கள் போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்.
- போட்டியாளரின் சொந்தப்பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கியம், ஓவியப்போட்டிக்கான படைப்புக்கள்'' என்றுகுறிப்பிடப்பட வேண்டும்,
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது
- போட்டி முடிவுத்திகதி -- 1994-01-20
- படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப் பிரிவு,**
**விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு**
**கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு கேட்டுக் கொள்கின்றது.

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

(சி-8296)



## பொங்கல் திருநாளே புதுயுகம் படைத்திடு

தங்கத் தலைவரின் தமிழீழ வரலாற்றில்
மங்காப் புகழ் படைக்கும் மாவீரர் மாண்போடு
எங்கள் திருநாடு தமிழ் ஈழம் மலர்ந்திட
பொங்கல் திருநாளே தீர்வு வகுத்திடு.

''மக்கள் நாங்கள் ஒன்று சேருவோம்
மண்ணை மீட்கும் புலிவீரரோடு.''

(சி-8372)

**யாழ். வர்த்தகர் சங்கம்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



அமரர்

### சரவணமுத்து கருணசேகரன்(பாபு)

(முன்னைநாள் திருமலை—கொழும்பு துறைமுக கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தர்)

**தோற்றம்:** 20-10-1939
**மறைவு:** 16-12-1993

''மெய் தந்தும் மேதினியுள் எமை உலவிட வைத்த ஐயனுக்கே - கை குவித்தும் மலர் சொரிந்தோம் பாத காணிக்கையாகவே''.

16-12-93-ல் எமையெல்லாம் ஆறாத்துயர் தனில் மூழ்க வைத்து மறைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும் உடன் ஒத்தாசைகள் நல்கியும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதல்கள் அளித்தும் நின்ற அனைவரையும் நாளை (15-01-94) நடைபெறவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டி வைபவங்களிலும், வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்வினிலும் பங்கு கொண்டு அவர் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

''ஜெய் பிறேம சாந்தி''

மகேஸ் பவனம்,
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், உற்றார், உறவினர்.

(சி-8370)

## நினைவு கூருகின்றோம்..
## 1994-01-14

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மணி** (இளையதம்பி மாசிலாமணி - 4-ம் கிராமம் - அம்பாறை)

மட்டக்களப்பு - வாழைச்சேனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். வில்லியம்** (கிருபைராசா ஜீவராசா - வாழைச்சேனை - மட்டு)

1988ஆம் ஆண்டு கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் இந்தியப்படையினரின் முகாம் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கர்ணன்** (கறுப்பையா சந்திரன் - கணேசபுரம் - கிளிநொச்சி)

இதே பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பிரசாத்** (சிங்கமுத்து ரவீந்திரகுமார் - ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

1989ஆம் ஆண்டு அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**குகேந்திரராசா** (முத்துக்குமார் குகேந்திரராசா - அக்கரைப்பற்று - அம்பாறை)

வவுனியா - ஓமந்தை, புளியங்குளம் பகுதியில் தேசவிரோதக் குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**விஜி** ( - காந்தரூபன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

யாழ் - திருநெல்வேலிப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**யூலியன்** (அந்தோனி சகாயநாதன் - ஆட்காட்டிவெளி - அடம்பன் - மன்னார்)

வவுனியா - இறம்பைக்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அல்பேட்** (வேலுப்பிள்ளை கணேஸ்வரன் - நெளுக்குளம் - வவுனியா)

கிளிநொச்சி - 5-ம் வாய்க்கால் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**டிஸ்கோ / ஞானம்** (மீனாட்சிசுந்தரம் சண்முகசுந்தரம் பொலிகண்டி - வல்வெட்டித்துறை)

இத்திமடுவில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கிருஷ்ணா** (- - - -)

1990ஆம் ஆண்டு திருக்கோணமடுவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் எமைப் பிரிந்த,

**சின்னவன்** (சாமித்தம்பி இந்திரகுமார் - புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை - மட்டு)

1991ஆம் ஆண்டு மட்டு - பாலமடுப்பகுதியில் ஆற்றைக்கடக்கும்போது எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த,

**நீதன்** (கனகரத்தினம்சந்திரன்-பன்குடாவெளிமட்டு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம்பெண்கள், இளைஞர்கள் உட்பட வந்தாறுமூலை, ஏறாவூர், ஐயங்கேணி, ஈரல்குளம் பகுதிகளைச் சேர்ந்த 16 தமிழர்கள்,

1992ஆம் ஆண்டு மட்டு - கோயில்போரதீவுப் பகுதியில் வீதியில் சென்றுகொண்டிருந்த போது ரோந்து நடவடிக்கையிலீடுபட்டிருந்த இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்,

1993ஆம் ஆண்டு மணலாறு - சிலோன்தியேட்டர் முகாமிற்கும், முந்திரிகைக்குள முகாமிற்குமிடையே அமைந்துள்ள சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய,

**ஆரணி** (பிறேமலதா கந்தையா - நவபுரம், கைதடி - சாவகச்சேரி - யாழ்)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**
**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(சி-8378)

# "யூதர்கள் எம்மைத் தாக்க முன் தாக்குங்கள் கொல்லும் முன் கொல்லுங்கள்"

பாலகுமாரன்

> அரபாத் ஓயாது பறக்கிறார் உலகத் தலைவர்களை இழந்து நிற்கின்றார்.ஏனென்றால் இப்போது பிரதமர் றபின் அவரது காலை வாரிவிடத் தொடங்கி விட்டார். இருந்தாலும் அரபாத் அமைதி பற்றி போதிக்கிறார். இரண்டு வேட்டுக்களைத் தீர்த்து எவரும் ஒரு கலகத்தை உருவாக்கலாம். ஆனால் அமைதியைக் கொண்டு வர அதிக உறுதி வேண்டும் என போராட்டத்திற்கு புதிய வரைவிலக்கணம் வகுக்கிறார். ஆனால் அவரது அல்பத்தா அமைப்பினரோ ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் கூறுவது வேறு. இப்போது போர் நிறுத்தம் முடிந்து விட்டது. எனவே அவர்கள் (யூதர்கள்) தாக்க முன், கொல்ல முன் நீங்கள் (பாலத்தீனியர்) தாக்குங்கள், கொல்லுங்கள் என்பதே.

பரிஸ், கெய்ரோ, ஜெனீவா, வாசிங்டன், டெல் அவிவ், அம்மான், டமாஸ்கஸ், ரியுனிஸ் என உலகின் முக்கியநகரங்களிலே உயர்தர உல்லாச விடுதிகளிலே பசிய புல்வெளிப் பகுதிகளிலே, அமைதியான கடற்கரையோரங்களிலே பேச்சுக்கள் தொடரப்படுகின்றன. பாலத்தீனிய, இசுரேலிய தரப்பினர் அமைதியாக ஒன்றாகஇருந்து புன்முறுவல் பூத்த வண்ணம் குளிர்பானங்கள் பருகியபடி பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதை உலகத்தொலைக்காட்சிகள் ஓயாமல் காட்டுகின்றன. இது ஒரு தரப்புக் காட்சி. இன்னொரு பக்கக் காட்சி முற்றிலும் வேறுபட்டது- எரிகின்ற வாகனங்கள், தகர்க்கப்பட்ட வீடுகள், கொல்லப்பட்ட யூதர், பாலத்தீனியர் சடலங்கள், ஆர்ப்பாட்டங்கள், இராணுவஅடக்குமுறைகள், கோபக்குமுறல்கள், கொந்தளிப்புக்கள் இவை இசுரேலிய அடக்குமுறைக் குட்பட்ட காசா, மேற்குக் கரைப் பகுதிக் காட்சிகள் இத்தகைய நிலையில் தான் இன்று சென்ற செப்டெம்பர் 13ஆம் திகதி மிக்கஎதிர்பார்ப்போடு கைச் சாத்தான இசுரேலிய - பாலத்தீனிய உடன்பாட்டின் நிலையுள்ளது.

உடன்பாடு நடைமுறைக்கு வரத் தொடங்க முன்னரே உடன்பாடு கொண்டுவரும் எனக் கருதப்பட்ட அமைதித் தளிர் கருகத் தொடங்குகின்றன. 5வருடகாலஎல்லையைக் கொண்ட - 63வெவ்வேறு விடயங்கள் தொடர்பான காலஎல்லைகளைக் வகுத்த -இன்றும் பலவற்றை இருதரப்பாரும் பேசித் தீர்க்க வழிசமைத்த உடன்பாட்டின் முதல் கட்டமே இன்று கேள்விக் குறியாகி விட்டது. முக்கியமாக எட்டப்பட்ட உடன்பாட்டில் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகளின்படி சென்ற டிசம்பர் மாதம் 13-ம் திகதியளவில் காசாப் பகுதியிலிருந்தும் ஜெரிக்கோ நகரத்திலிருந்தும் இசுரேலியப் படைகள் வெளியேறுவது பற்றியும் பாலத்தீனியர் கட்டுப்பாட்டில் இவை வருவது பற்றியும் உடன்பாடு எட்டப்பட்டிருக்க வேண்டும்; உடனடியாகவே இசுரேலியப் படைகள் இப்பகுதிகளிலிருந்து வெளியேறத் தொடங்கியிருக்க வேண்டும்; 5 வருடகால மட்டுப்படுத்தப்பட்ட பாலத்தீனிய தன்னாட்சிக் காலம் அன்றிலிருந்து தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் இவை எதுவுமே இன்று வரை நடக்கவில்லை. உடன்பாட்டின் அடிப்படை ஏற்பாடுகளே இன்று சிக்கலுக்குரியவையாகிவிட்டன. பிரதான கருத்து வேறுபாடு ஜெரிக்கோ நகர் பற்றியது; அதன் எல்லை பற்றியது. பாலத்தீனிய தரப்பிலோ எதிர்பார்க்கப்பட்டது 340 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு, இசுரேலோ கடும் தயக்கத்தின் பின் தர ஒப்புக் கொண்டது, 60 சதுர கிலோ மீற்றர் மட்டுமே. அதுபோலவே மேற்குக் கரை வாசலில் ஜெரிக்கோ இருப்பதால் இப்பகுதிக்கும் ஜோர்தானுக்கும் எகிப்திற்கும் உள்ள எல்லைக் கடப்புப் பாதையினை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே இருதரப்பினரும் விரும்புகின்றனர். ஏனெனில் மேற்குக் கரைக்கும் சருவதேச நாட்டுத் தொடர்புகட்கும் ஊடகமாக இப்பகுதிகளே இருக்கின்றன. இவை தொடர்பான சிக்கல் இன்னமும் தீர்ந்தபாடில்லை.

மேலும் இதுவரை காலமும் இசுரேலிய சிறைகளில்வாடும் 12,000 பாலத்தீனியரை விடுதலை செய்வது தொடர்பான நடைமுறைகளும் சிக்கலிலேயே உள்ளன. ஒருவாறாக 10,000 பேரை விடுவிக்க முன்னர் ஒத்துக்கொண்ட இசுரேல் இப்போது அவ்விடயத்திலும் தயக்கம் காட்டுகின்றது; இவர்கள் யாவரும் பாலத்தீனிய மக்கள் கிளர்ச்சியின் போது கைதானவர்கள். இவர்கள் உடன்பாட்டை எதிர்க்கும் கமாஸ் இயக்கத்தினர் பலர் இருப்பதால் அவர்களை விடுவிக்க முடியாதென றபின் இப்போது கையை விரித்துவிட்டார். இவ்வாறு செய்வது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அரபாத்திற்கு எதிராக கடும் எதிர்ப்பலைகளைக்கிளப்பும் என்பதால் கமாஸ் இயக்கத்தினரையும் விடுவிக்குமாறு அரபாத் தரப்பினர் வேண்டி நிற்கின்றனர். ஆனால் இசுரேலிய தரப்பினரோஇவர்களைவிடுவிக்காததற்கு முக்கியகாரணம் இவர்களால் அரபாத் தரப்பினர்க்கே ஆபத்து ஏற்படும் என்பதால்தான் எனக்கூறி எரியும் நெருப்பில் எண்ணெய்ஊற்றி வருகின்றார். இப்போது என்ன நடக்கிறது என்றால் மேற்குக் கரை காசாப் பகுதியில் மேலும் மேலும் கைதுகள் தொடர்வது தான். சென்ற நவம்பர் மாதமளவில் 1000 பாலத்தீனியர் இவ்வாறு இசுரேலிய தரப்பால் புதிதாக கைதாகியுள்ளனர். எனவே ''எவரும் இரண்டு வேட்டுக்களைத் தீர்த்து ஒரு கலகத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அமைதியைக் கொண்டு வர அதிகம் துணிவும் நெஞ்சுரமும் வேண்டும்'' எனக் கூறிய அரபாத் இப்போது ஓயாது பறக்கிறார்; உலகத் தலைவர்களோடு பேசுகிறார்; பாலத்தீனிய தனிநாடு அமைவது நிச்சயம் என இடைக்கிடை உரத்த குரலில் ஓங்கியறைகின்றார்; ஆனால் பிரதமர் றபினோ அவரை காலை வாரி விடுவதே தனது நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார்.

ஆனால் தள நிலைமைகளோ நாளுக்கு நாள் மோசமடைந்துபோகின்றன இசுரேலிய இராணுவத் தரப்போ இப்போது மிக மும்முரமாக பாலத்தீனியப் போராளிகளை வேட்டையாட முயல்வதால் நிலைமை இன்னும் சிக்கலாகிவிட்டது.

அண்மையில் காசாப் பகுதியில் சமாஸ் அமைப்பின் இராணுவப் பிரிவான — குவாசிம் (AL-Qassim) தலைவர்களான காலித் அல் சியரும், இமாத் ஏகல் (Imad Agal) சுட்டுக் கொல்லப்பட்டபின் காசாப் பகுதி பெரும் கலவரங்களைத் தோற்றுவித்து வருகின்றது. இவர்கள் மட்டுமன்றி அரபாத்தின் அல்பத்தா அமைப்பைச் சேர்ந்தவர்களும்- இவர்கள் உடன்பாட்டை ஏற்று ஆயுதங்களைக் கைவிடுத்து பொது மன்னிப்பும் பெற்றவர்கள்கூட இப்போது கொல்லப்படுகின்றனர். இவ்வாறு அல்பத்தா இராணுவப் பிரிவின் (Fatah Hawk) உறுப்பினரான அகமது அபுறீஸ் கொல்லப்பட்டார். இன்னும் பலர் கைதாகியுள்ளனர். இச்செயல் அரபாத்தின் முதுகில் குத்தியதுபோல் ஆகிவிட்டது. இப்போது அல்பத்தா அமைப்பினர் தமது தலைமையை கருத்தில் எடுக்காது போர் நிறுத்தத்தை தாம் கடைப்பிடிக்க முடியாதெனக்கூறி இசுரேலிய குடியேற்றவாசிகள் மீதான தாக்குதலை மீண்டும் ஆரம்பித்து சில யூதரைச் கொன்றும் விட்டனர். இவ்வாறாக அதிகரிக்கும் கிளர்ச்சிகள் காரணமாக சென்ற மாதம்வரை 28 பாலத்தீனியரும் 9 யூதரும் கொல்லப்பட்டதாகத் தெரிகின்றது. அரபாத் அமைதிபற்றிப் பேசும்போது அவரது அமைப்பினரோஅண்மையில் விடுத்த அறிக்கையில் மேற்குக் கரையில் குடியேற்றப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட யூதரை கொல்லுமாறு ஆவேசக் குரல் எழுப்புகின்றனர். அவர்கள் சொல்வதாவது: ''அவர்கள் (யூதர்) உங்களைத் தாக்கமுன் நீங்கள் தாக்குங்கள் அவர்கள் உங்களைக் கொல்லமுன் நீங்கள் அவர்களைக் கொல்லுங்கள்'' என்பதுதான்.

இது பாலத்தீனியத்தரப்பின் நிலை. இசுரேலியத் தரப்பிலோ நாளுக்குநாள் உடன்பாட்டிற்கு 'தொடக்கத்தில் இருந்த ஆதரவு குறைந்து வருவதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக இசுரேலிய குடியேற்ற வாசிகள் பலத்த ஆர்ப்பாட்டங்களை செய்வதோடு பாலத்தீனியர் பலரைக் கொல்லவும் தொடங்கிவிட்டனர். எனவே இப்போது உடன்பாட்டினை எதிர்க்கும் இரு தரப்பினரைச் சார்ந்தோரும் மும்முரமாக செயற்படுகின்றனர். ஆரம்பத்தில் இசுரேலிய தரப்பில் 53 வீதமாக உடன் பாட்டிற்கு இருந்த ஆதரவு இப்போது 48 வீதமாக குறைந்து விட்டதாக பத்திரிகைக் கணிப்பொன்று தெரிவிக்கிறது. இது காலம் வரை பாலத்தீனியப் பகுதிகளில் செழிப்பான பகுதிகளில் நிரம்பிய வசதிகளோடு வாழ்ந்து வந்த யூதர் குடியேற்ற வாசிகள் காட்டும் எதிர்ப்பானது நாளுக்கு நாள் தீவிரமடைகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியின் நிலை இன்றுமிக விசித்திரமானது. உடன்பாட்டினை எதிர்க்கும் இருதரப்பைச் சார்ந்தோரும்தமக்குள் கடுமையாக மோதுகின்றனர் இசுரேலிய இராணுவமோ இதுவரை காலமும் பாலத்தீனியரை அடக்கியதுபோல் யூதக் குடியேற்ற வாசிகளையும் அடக்க நேரிடுகின்றது.

இந்நிலையில் யிட்சாக் றபினின் அரசும் உறுதியாக இல்லை. தடுமாறிக்கொண்டிருக்கும் ஆட்சி இன்று அவருடையது. அவருக்கு ஆதரவு வழங்கியிற்போக்குமதவாத Shas கட்சி தனது ஆதரவை விலக்கியபின் இசுரேலிய நாடாளுமன்றில் ஒரு வாக்கு வித்தியாசத்திலே றபின்அரசு தப்பிப்பிழைத்து வருகிறது 120 பேரைக்கொண்ட நாடாளுமன்றில் 56 பேர் மட்டுமே றபினின் கூட்டு கட்சிகளினது உறுப்பினர்கள். இதனால் இவர் சிறுபான்மைக் கட்சியான அரபுக்களின் கட்சியொன்றின் ஆதரவைநாட முற்படுகின்றார். அவர்களோஅமைச்சர் பதவி தந்தாலே ஆதரவு என்கின்றனர். இசுரேலிய 45 வருடகால வரலாற்றிலே அரபுக்கள் அமைச்சர் பதவி வகித்தது கிடையாது.

அதேசமயம் பழமை வாதிகளை கடும் கோட்பாளர்களை திருப்திப் படுத்தியே றபின் ஆள முடியும். அதேசமயம் இன்னொரு இக்கட்டும் இன்று அவருக்கு ஏற்பட்டுள்ளது. இடதுசாரிப் போக்குள்ள மீரட்ஸ் (Meretz) கட்சியோ அமைதிக்குக் குந்தகமாக றபின் நடப்பதை விரும்பவில்லை. அவ்வாறு நடந்தால் தனது ஆதரவை விலக்குவோம் என அச்சுறுத்தி வருகின்றனர். இவ்வாறு றபினின்ஆட்சி இருதலைக் கொள்ளி எறும்பாக தத்தளிக்கின்றது.

இதனால் அவர் முன்னர் ஏற்றுக் கொண்டபடி பாலத்தீனிய காவல் துறையினரை காசா, ஜெரிக்கோ பகுதியில் ஈடுபடுத்துவது பற்றி அதிக ஆர்வம் காட்டுகின்றாரில்லை. 15,000 பாலத்தீனிய காவல் துறையினர் செயல்படத்தக்க சூழல் இன்னமும் உருவாக்கப்படவில்லை. இவர்கட்கு வழங்கப்படும் ஆயுதங்கள் குறித்தும் விவாதங்கள் நடக்கின்றன. ஆனால் இசுரேலிய குடியேற்றவாசிகளோ இக்காவல்துறைசெயற்பாட்டிற்கு கடும்எதிர்ப்பைகாட்டிவருகின்றனர். இசுரேலியப்பத்திரிகைகளோ எமக்கெதிராகப் போராட நாமேபாலத்தீனிய இராணுவப் பிரிவொன்றை அமைத்துக் கொடுப்பதாஎன சங்கடமான கேள்வியை எழுப்பி றபினை மேலும் பின்வாங்கச் செய்கின்றனர். என்றாலும் பாலத்தீனிய காவல் துறை விடயத்தில் பிரதமருக்கு உள்நோக்கம் ஒன்று உண்டு. பல்வேறு அரபுநாடுகளில் பாலத்தீனிய விடுதலை இராணுவப் பிரிவினராக செயற்பட்ட போராளிகளை காவல்துறை பணியில் கொண்டு வந்து காசா, ஜெரிக்கோ பகுதிகளில் ஈடுபடுத்துவதால் ஆகக்கூடிய நன்மை தமக்கே என்பதே அவ் உள் நோக்கம். ஏனென்றால் அனேகமான பாலத்தீனிய குடும்பங்களில் பல்வேறு பாலத்தீனிய அமைப்புக்களில் அக் குடும்ப உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதன் பயன் தந்தை காவல்துறையினராய் இருக்க தனயன் கமாஸ் இயக்கத்தில் இருப்பர். தமையன் அல்பத்தாவிலும் தம்பி யோர்த்கபாசின் அமைப்பிலும்இருப்பார். இதன்விளைவு இவர்கள் தமக்குள்ளே மோதி அழிவர் என்பதே றபின் காட்டும் நல்லெண்ணம்? எப்படிப் பார்த்தாலும் அரபாத்தின் தலைமைக்கு பெருத்த அவமானத்தை தேடி அவரை இறுதியில் வீழ்த்தி விடுவதே இசுரேலியத் தரப்பின் நோக்கமோ என்கிற சந்தேகம் இப்போது வலுத்து வருகின்றது.

இசுரேலியர்எதிர்பார்த்தது போலவே அரபாத் தலைமை இப்போது தரை தட்டி விட்டது. இப்போது இன்னொரு திருப்பமும் ஏற்படுகின்றது. சிரியத்தலைவர் அசாத்தோடு இசுரேலுக்கு உடன்பாடு ஏற்பட அமெரிக்கத் தரப்பு இப்போது முழு மூச்சாக முயல்கின்றது. எதிர்வரும் 16ஆம் திகதி இது தொடர்பாக பில்கிளிங்டனே வலியப்போய் அசாத்தை சந்திக்கப் போகிறார். உடன்பாட்டினை கடுமையாக எதிர்க்கும் இடதுசாரி தீவிர பாலத்தீனிய அமைப்புக்கள் டமாஸ்கசிலே இயங்குகின்றன. ஈரானுக்கு ஊடாக ஏனைய கமாஸ், நிகாத், கிஸ்புல்லா அமைப்புகட்கு சிரியா மறைமுக ஆதரவினையும் வழங்குகின்றது. லெபனானில் 40,000 துருப்புக்களைவைத்து தனதுமேலாண்மையை அங்கு நிலைநாட்டுகின்றது. இவை எல்லாவற்றையும் விட அரபாத்தை மோசமாகவெறுப்பவர்அசாத் என்பதும் இங்கே சொல்லப்பட வேண்டியசெய்தி. எனவே அசாத் பொறுமையாக காத்திருப்பவர் என்று கூறப்படுவது பேரல் கோலான் குன்று பகுதியை திரும்பப் பெறவும் தனது உதவியின்றி பாலத்தீனிய சிக்கல் தீராது என்பதை உணர்த்தவும் அரபாத் வீழ்ச்சியை எதிர்பார்த்தும் காத்து நிற்கிறார் இதுஅரபுலகமோதலின் ஒரு பரிமாணம்.

எனவே இப்போதுசூழ்நிலைகள் பாலத்தீனிய தன்னாட்சியின் தொடக்கத்தை குறிக்கிறதா அல்லது அரபாத்தின் தலைமையின்வீழ்ச்சியைக்குறிக்கிறதா என்கிற கேள்விக்கு விடை கிடைக்கத் தொடங்குகிறது. இப்போது மேற்குக் கரையில் மட்டுமல்ல ரியுனிசிலும் அல்பத்தா உயர் தலைவர்களே அரபாத்தை விட்டு விலகுகின்றனர். பொதுவாகவே மேற்குக் கரைப்பகுதி எப்போதுமே அரபாத்தின் ஆதரவு மிக்க பகுதியாக இருந்தது. ஆனால் இப்போது கதையே மாறிவிட்டது. எப்போதுமே பாலத்தீனிய ஆதரவு எவர் பக்கம் என்பதை அறிய ஒரு அளவு கோலாகக் கருதப்படும் புகழ் மிக்க மேற்குக்கரை பேர்செயிற் (Bir zeit) பல்கலைக்கழக மாணவர் அவைத் தேர்தலில் இம்முறை அரபாத் அமைப்பு தோற்றுப் போய்விட்டது. 9 உறுப்பினர் மாணவர் அவையில் ஐவர் காமாஸ் இயக்கத்தவர். மிகுதியானோர் சிரிய ஆதரவு பெற்ற அமைப்புக்களைச் சேர்ந்தவர் அரபாத்திற்கு பலத்த பின்னடைவு இது.

எனவே இப்போது நிலை இதுதான் எவ்வளவு தான் உயரப் பறந்தாலும் தரை

(2ஆம் பக்கம் பார்க்க)

பொங்கலோ பொங்கல்
எங்கும் தங்கும் நல்தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!!

தரத்தில்குறையாத தங்க நகைகளை தெரிவுசெய்வதற்கு
லலிதா நகை மாளிகை
213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மளிகைப் பொருள்களை மலிவு விலையில் பெற்றிட
மங்கையர் நாடிவரும் இடம்:
கரன் வர்த்தக நிலையம்
772, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

சகல விதமான பதிப்பக வேலைகளுக்கும்
எம்மை நாடுங்கள்!
சாந்தி அச்சகம்
575, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது பொங்கல் நல் வாழ்த்து!
நதியா ஜுவல்லறி
(ஸ்ரான்லிவீதிச் சந்தி)
2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகலவித பொருள்களையும் தெரிவு செய்திட நாடுங்கள்
றாஜு ஸ்ரோர்ஸ்
(RAJU BUILDING)
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

கேக், குளிர்பான தயாரிப்பு பொருள்கள் விற்பனையாளர்
கணேஷா வர்த்தக நிலையம்
65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பொங்கல் வாழ்த்துகள்!
ஃ சகலவிதமான கைக்கடிகாரங்கள்
சுவர் மணிக்கூடுகளுக்கு
அஸ்டி 269/1, 1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மங்கலம்பொங்கும் தைத்திங்கள் எங்கணும் பொங்குக!
நவீன துணிவகைகள், றெடிமேட் ஆடைகளுக்கு
நியூ ஹப்பி ரெக்ஸ்
146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

கல்யாண முகூர்த்தப் புடவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி ஜவுளி சமுத்திரம்
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகை
வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவிக்கிறோம்!
"ஒளி இல்லம்"
(அந்தியகால சேவை)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

வண்ணப் புகைப்படங்களுக்கும்
வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்

# 'பொங்கட்டும் மக்கள் எழுச்சியும்"

''தைபிறந்தால் வழி பிறக்கும்'' என்பது தமிழர்களின் பாரம்பரிய நம்பிக்கைகளில் ஒன்று

களனி கொத்தி - நெல் விதைத்து மழையை நம்பி வானம் பார்த்து பயிரை வளர்த்து அதில் நெல்மணிகளை எடுத்து சமைத்து உண்டு உற்றாருக்கும் வழங்கி வந்த பண்பாட்டு வழிவந்தவர்கள் நம் தமிழர்கள்.

அந்த வரலாற்றுத் தொடராக தைத்திங்களில் புது நெல் எடுத்து அருணன் உதயத்தை நோக்கிப் பொங்கிப் படைத்து அவனுக்கு நன்றியைத் தெரிவித்துவந்ததமிழர் வழக்காக, தைப் பொங்கல் திருநாள் தமிழர்களது தனித்துவம் வாய்ந்த திருநாளாக உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

தைத்திங்கள் முதல்நாளில் தமிழர் இல்லங்கள் தோறும்- வீட்டு முற்றங்களில் கோலங்கள் போட்டு புதுப்பானையில் நெய்மணக்க சர்க்கரைப்பாகில் பொங்கல் பொங்கி மனையாளுடன் குடும்பத் தலைவனும் இணைந்து பிள்ளைகளும் சூழ நிற்கும் மங்களகரமான பொங்கல் காட்சியை காணலாம்.

## கவிகரன்

ஆனால் இரண்டாம் ஈழப் போரை சிறிலங்கா அரசு தமிழர்களின் தாயகமண்ணில் திணித்து வெறியாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் எமது பண்பாட்டு வழிப் பொங்கலை நாளாந்தம் செய்து உண்பதே கேள்விக்குறியாக இருந்து வருகிறது.

தமிழ் மண்ணில் விவசாயத்துக்கு முதலிடம் பெற்ற கிழக்கு மாகாணம் (தென்தமிழீழம்) கயவர்களால் சூறையாடப்பட்டு பொலிவிழந்துள்ளது.

வடபகுதியில் வான்தாக்குதலால் மக்கள் பீதிகொண்டுள்ளனர். தீவகம் முதல் வலிகாமம், மற்றும் வடமராட்சி கிழக்கு வரையில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டுள் இராணுவ நெருக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

இந்நிலையில் தமிழர்கள் ஒவ்வொருவரும் தாயக மண்ணை மீட்டு சுதந்திரப் பொங்கலைச் செய்து எதிர் காலத்தில் மகிழ்வதற்கு - எதிரியை எதிர்கொண்டு அடிக்கு அடி கொடுக்க, இத் தைத்திருநாளில் பொங்கி எழுவோமாக!

இனிய பொங்கல்
வாழ்த்துக்கள்
கல்யாணி
தங்க மாளிகை
(தங்கப்பவுண் நகை
வியாபாரம்)
189A, கஸ்தூரியார்
வீதி,
யாழ்ப்பாணம்.
முன்னாள் 'அன்ரன்லக்ஷா
பெயர் மாற்றம் பெற்றது

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

மளிகைப் பொருள்கள் மற்றும்
புடைவை, அலுமினிய பொருள்கள்
எதுவாகிலும் ஒரே இடத்தில்
வே. ம. சி. களஞ்சியம்
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல்
சிறப்புற வாழ்த்துகிறோம்!
கட்டடப்பொருள், பெயின்ற் வகைகளுக்கு எம்மைநாடுங்கள்!
முருகன் றேடர்ஸ்
21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துகளை
தெரிவிக்கின்றோம்!
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை: 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

ஃ 22 கரட் தங்கத்தில் ஆடர் நகைகள் செய்து வழங்கப்படும்.
ஃ நவீனரக வெள்ளிப் பாதசரங்களை பல விதங்களிலும் தெரிவுசெய்ய
கயல்விழி நகைப்பூங்கா
224 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துப் பொங்கல்
பயிர்ப் பொங்கல் ஈழத் தமிழர்
பண்பாட்டின் வழிவந்த பண்புப் பொங்கல்
உயிர்ப் பொங்கல் உழவர்களின்
உவகைமிகு உச்சநிலை உணர்த்தும் பொங்கல்
நயப்பு நிறை நம்தமிழர் தைப்பொங்கல் நந்நாளில்
''அண்ணா'' சொன்ன உயர்ச்சிநெறி ஓங்கிட நாம்
ஒன்றிணைந்து முயற்சிக்க வாழ்த்துகின்றோம்!
அண்ணா தொழிலகம்
இணுவில்.

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு எமது
பொங்கல் வாழ்த்துகள்!
ஃ வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை சரியாகத் தருபவர்கள்
எஸ். எம். பெர்னான்டோ
(இலங்கை வங்கி மருங்கில்)
580, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

மங்கலப் பொங்கலைச் செய்து மகிழ்ந்திருக்கும்
அன்பர்கள், நண்பர்கள், தொழிலாளர்களுக்கும்
தங்கும் மங்களம் நிலைத்திட வாழ்த்துகிறோம்!
ஆர். வி. ஜி. பீடி கம்பனி
58, குறுக்கு வீதி - நல்லூர்.
கிளை:
ஆர். வி. ஜி. மருந்தகம்,
504, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களுக்கு எமது
தித்திக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
குளிர்பானம், குளிர்களி மற்றும்
சிற்றுண்டி வகைகளுக்கு
பெயர்பெற்ற ஸ்தாபனம்
லிங்கம் கூல்பார்
(வெலிங்டன் சந்தி)
52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
தைப்பொங்கல் வாழ்த்துகள் உரித்தாகுக!
பெயின்ற் வகைகள், சைனா றபர் ரோல், அரம், வீடியோ கசற், ஓடியோ கசற் மற்றும்
மருந்து வகைகள், மளிகைப் பொருள்களுக்கும் எம்மை நாடுங்கள்.
எஸ். வி. முருகேசு 158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி8338)

# மாணவர் பெறுபேறு உருவாக்கத்தில் கற்பித்தலின் பங்கு பற்றி ஆய்வு

நூறு வீத மாணவர் அடைவைப் பெறுவதற்குவழி செய்யும் வகையில் கற்பித்தல் தொழில் நுட்பத்தைச் செழுமைப் படுத்துவது குறித்த தேடலாக அண்மையில் நல்லூர் சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலையில் பரீட்சார்த்த பயிற்சித் திட்டம் ஒன்று நடைபெற்றது. நாளொன்றுக்கு 6 மணித்தியாலங்கள் வீதம் 15 நாட்களில் மொத்தம் 90 மணித்தியாலங்கள் நடைபெற்ற இத்திட்டத்தில் 15 வயது முதல் 45 வயது வரையானோர் மொத்தம் 32 பேர் கலந்து கொண்டனர். பல்வேறு திறன் மட்டங்களைக் கொண்ட 9, 10, 11 தரங்களைச் சேர்ந்த மாணவர்கள் 4 பேர், க.பொ.த.உயர்தரம் மாணவர் ஒருவர், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 4 பேர், பயிற்சி ஆசிரியர்கள் 11 பேர் ஆய்வுகூட உதவியாளர்கள் 2 பேர், பல்வேறு தொழில் கூடங்களில் வேலை செய்வோர், ஏனைய தனியார் நிலையங்களில் கற்போர் 10 பேர் என எல்லோரையும் ஒருசேர இணைத்துக் கற்றல் - கற்பித்தல் தொழில் நுட்பத்தோடு தொடர்புடைய அம்சங்கள் குறிப்பிட்ட அமர்வுகளில் பரீட்சார்த்த முயற்சியாக மேற்கொள்ளப்பட்டன. இந்த விதத்தில், இக்குழு கூட்டுத் தன்மையும், சம்மதிப்புத் தன்மையும் கொண்டது. அதாவது கூட்டுணர்வு அடிப்படையாக இயங்கியது எனக் கருதலாம்.

## பயிற்சித் திட்டத்தின் நோக்கம்:

பல விதமான பணிச் சுமைகள் மத்தியிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. சுப்பிரமணியம் பயிற்சித் திட்ட வரைவைத்தயாரித்துள்ளார்.

—பல்வேறு திறன் மட்டங்களையும் கொண்ட மாணவர் குழுவினரைத் திருப்திப் படுத்தக்கூடியதும், குறிப்பிட்ட அடைவு இலக்கை (பெறுபேறுகளை) 100 வீத மாணவரும் பெறக்கூடியதுமான கற்றல்—கற்பித்தல் தொழில் நுட்பமொன்றைக் கண்டறிதல்.

—ஆசிரியர் குறிப்பு(Notes) வழங்காமலே மாணவர்களாகவேகுறிப்பெடுத்து பயன் பெறக் கூடியவர்களாக உள்ளனரா என்பதைப் பரீட்சித்தல்.

—அறிவாற்றல் மட்டுமின்றிச் செயல்திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று நிலைகளிலும் எல்லா மாணவர்களையும் விருத்தி செய்து அடைவை பெறச் செய்யலாமா எனக் கண்டறிதல்.

— பாடசாலை விடுமுறைக் காலங்களில் ஆசிரியர்கள் தமதும், மாணவர்களினதும் பயன்பாடு கருதிப் பயிற்சி பெறும் மனப்பாங்கு உள்ளவர்களா என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் இன்றைய யாழ்ப்பாணச் சூழலில் முதல் முறையாக உருவாக்கப்பட்ட பரீட்சார்த்த பயிற்சித்திட்டம் இது என்பது குறிப்பிடத் தக்கது. இனி, இத்திட்டத்தில் கற்பிக்கப்பட்ட பாடத்தைப் பற்றித் தொகுத்தல் பொருத்தமாயிருக்கும்.

மாணவர் நாளாந்த வாழ்க்கையில் பிரயோகிக்கக் கூடிய மின்சாரமே பாடப் பொருளாகப் பெரும்பாலும் அமைக்கப்பட்டிருக்கிறது, தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானக்கல்வி சார்ந்த பாடப் பரப்பு இது. சேர்ந்தாற்போல் சமூகத்தின் உழைப்பு போக்கில் மின்னியல் பிரிவில்இடம்பெறும்இன்னோரன்ன விஷயங்களுக்கும் அழுத்தம் தரப்பட்டுள்ளது. அடுத்ததாக இலத்திரனியல் வேலையில் ஈடுபடுவதற்கான கருவிகளையும் பொருள்களையும் கொள்வனவு செய்யவும், திட்டமிட்டுச் செயற்படக் கூடியவராகவும், இலத்திரனியல் தொழில்துறையில் நாட்டத்தையும், தொழில் அவசியம் பற்றிய மனப்பாங்கைவிருத்திசெய்வதோடு சிறப்பாற்றலை பெறுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல் இந்தப் பயிற்சித்திட்டத்தின் உச்ச இலக்காகும். இங்குதான் செயல் முறைக் கற்றல் - கற்பித்தலுக்கும், அது அல்லாத கற்றல்-கற்பித்தலுக்கும் இடையிலான எல்லைக்கோடு தெளிவாகின்றது.

விடுமுறைக் காலப் பயிற்சிகள், உள்ளகப்பயிற்சிகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் அட்டவணையைப் பார்க்கும் போது, பயிற்சித்திட்டப் போக்கின் பொதுத்தன்மையிலிருந்து வேறுபடுகின்ற இந்தப் பரீட்சார்த்தப் பயிற்சித் திட்டத்தின் போதனாசிரியர் அ. நடராஜசுந்தரம் இலத்திரனியல் உதிரி உறுப்புகளுக்கான தட்டுப்பாடு, யானை விலை, மின்சார வசதியின்மை ஆகிய பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் குறிப்பிட்ட கால எல்லையில் பயிற்சி நிறைவு செய்யப்பட்டது என்பதைக் குறிக்க வேண்டும்: இந்தப் பயிற்சித்திட்டத்தில் பங்கு பற்றிய ஒவ்வொரு மாணவரும் குறைந்தது 500 ரூபாவிலிருந்து 1200 ரூபா வரைசெலவு செய்துள்ளனர். கல்விக்கான பயனுள்ள முதலீட்டில் மாணவர் நாட்டத்தையே இது வெளிப்படுத்து கிறது என்று திட்ட வடிவமைப்பாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எனினும் இது ஆய்வுக்கு உட்பட்டதாகும்.

அடுத்து, பயிற்சித்திட்டம் பற்றிய அவதானிப்பைக் காணலாம். பல்வேறு அம்சங்களைத் தொடும் அவதானிப்பு பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. 100வீத மாணவர்களும் அடிப்படை இலக்கை எட்டியுள்ளனர், 9 மாணவர்கள் தமது ஊக்கத்தினாலும், தேடலினாலும் உச்ச இலக்காகத் தீர்மானிக்கப்பட்ட செயல் திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர். குழுவில் சமச்சீரற்ற திறன் மட்டங்களை உடையவர்கள் இருந்தபோதும் தாழ் நிலையானவர்களுக்கு ஏற்ப எளிய கற்பித்தல் செயல் முறையைப் பிரயோகிக்கும் போது எவரும் இலக்கை அடைவர். உயர் நிலையிலுள்ள மாணவர்களின் கற்றலுக்குத் தேவையானதும், பொருத்தமானதுமான செயல் அடிப்படையிலான ஏற்பாடுகள் இருப்பின் மாணவர்கள் சலிப்படையார். மாணவர் பயிற்சிக் காலத்தில் (15 நாள்கள்) தனியார் கல்விக்கழகங்கட்குசெல்வதில் (Tuition) நாட்டம் எதுவும் காட்டவில்லை. ஆசிரியர், ஏனையோர் வரவில் ஒழுங்கு காணப்பட்டது. ஆசிரியர் குறிப்பு வழங்காமலே மாணவர்கள் தாமாகவே குறிப்பெழுதிக் கொண்டனர் தாமாகவே உசாத்துணை நூல்களைத் தேடிக் கற்க முயன்றனர். மாணவர்கள் செயல் முறைகளில் ஈடுபட்டதன் மூலம் செயல்திறனையும், அறிவு விளக்கத்தையும், நல் மனப்பாங்கையும் பெற்றுள்ளனர். நல் மனப்பாங்கு விருத்தியின் விளைவு காரணமாக ஆசிரியர் — மாணவர் உறவு அன்னியோன்யமாக இருந்தது. ஆசிரியருக்கு மரியாதையும், பரிசும் கொடுத்து தமது உளவிருப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந் நிலையில் தேர்வு மதிப்பீட்டுக் கோணத்திலிருந்து பார்த்தால், அறிமுகத் தேர்வில் 100 வீதமான மாணவரும் "S" தரத்துக்கு மேல் (35 அதிகமான புள்ளி) தேறியுள்ளனர். செயல் முறைத் தேர்வில் 100வீத மாணவரும் "C" தரத்துக்கு மேல் (50

## மதன்

அதிகமான புள்ளி) தேறியுள்ளனர்.

## பயிற்சித் திட்ட விளைவுகள்

பரீட்சார்த்த பயிற்சித் திட்ட விளைவுகள் கீழ் வரும் முறையில் அறிமுகப்படுத்தப் படுகின்றன. பாதை தெளிவாக இருக்கிறது. ஆனால் இன்றைய கல்விச் சூழலுடன் சார்புபடுத்திச் சிலவற்றை இங்கு காணலாம்.

வகுப்பறைக் கற்பித்தலின் போது ஆசிரியர் தமக்கு ஒப்படைக்கப்பட்ட மாணவருக்குப் பொருத்தமான கல்வித் தொழில் நுட்பத்தைப் பிரயோகிக்கும்போது நூறு வீத அடைவைக் காணலாம்.கல்வி கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையின்போது பின்பற்றப் படும் செயற்பாட்டு ரீதியான கற்பித்தல் தொழில் நுட்பம் அனைத்துப் பாடங்களுக்கும் பிரயோகிக்கக் கூடியது. யோதிய முன்னாயத்தம் செய்து கொண்ட ஆசிரியரின் கற்பித்தல் ஒழுங்கினால் மாணவர் எல்லோரும் கற்றலில் ஈடுபடுவதோடு,மாணவர் திறன் வேறுபாட்டுக்கு ஏற்ப பயிற்சிகளையும், ஒப்படைகளையும்ஆசிரியர்திட்டமிட்டுக் கொண்டு வகுப்புக்கு வருவதினால் மாணவர் சலிப்படையாது கற்றலில்ஈடுபடுவர். ஏனைய சக மாணவர்களுக்கும் இடையூறாக இருக்க மாட்டார்கள். செயல்முறை ஈடுபாட்டில் மாணவரை பங்குகொள்ளச் செய்யும் போது மாணவர் தாமாகவே முன்னாயத்தம் செய்துகொள்வர்.இயல்பாகவே கற்கமுயற்சிப்பர். தாமாகவே குறிப்பெடுத்துக் கொள்வர். இது அவர்களின் எழுத்தாக்கத்துக்கு உதவுவதோடு பரீட்சைக்கும் உதவும். எவ்வகையில் வினா அமைப்பு மாறியபோதும் சுயமாகவே பிரச்சினையை விடுவித்து விடையை வெளிப்படுத்துவர். பாடசாலைக் கல்வி வெறும் அறிமுறைக் கல்வியாக இருப்பின் மாணவர் உற்சாகமிழந்து வரவு ஒழுங்கு சீர்கெடுவதோடு, தமது கற்றலுக்கு வேறு பிரத்தியேக நிலையங்களைத் தேடிக்கொண்டே இருப்பர். கல்விப் பெறுபேற்றுக் குறைவுக்கான காரண காரியங்களைக் கண்டறிவதிலும், பொருத்தமான பரிகாரங்களைக் கண்டறிவதிலும் அனைவரும் முயற்சித்தல் அவசியம். திட்டமிட்ட மேற்பார்வைகளும், கண்காணிப்புகளும் பயன் தரும். ஆசிரியருக்குப் பொருத்தமான பயிற்சி அளிப்பதன் மூலம் ஆசிரியரின் பயனுறுதி வாய்ந்த சேவையைப் பெறுவது இலகுவாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவை முடிந்த முடிவாக இருக்கப்போவதில்லையெனினும், அவற்றை நடைமுறைப் படுத்தும்பட்சத்தில், நூறு வீத மாணவர் அடைவுக்கான கற்றல் - கற்பித்தல் தொழில் நுட்பத்தில் மாற்றத்தை உருவாக்கும் என நம்பலாம்.

### மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை

இப்பயிற்சித் திட்டம் தொடர்பான மதிப்பீட்டுக் குழுவில் கல்விப் பணிப்பாளர் இருவர், மூன்று பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஓர் தேசிய கல்லூரி அதிபர், ஓர் முதன்மை ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர். குழு, பயிற்சித் திட்டத்தை மதிப்பீடு செய்ததன்பேரில், அதன் அவதானக் கருத்துத் தொகுப்பாகப் பின்வரும் விளக்கத்தினைப் பரிந்துரைத்துள்ளது.

ஃ இக்கற்பித்தல் தொழில், தொழில் நுட்பம் எல்லாப் பாடசாலைகளுக்கும்விஸ்தரிக்கப் படுதல் நன்று.

ஃ இதனை எல்லா மாணவர்களும், ஆசிரியர்களும் அறியவும், காணவும் வாய்ப்பளித்தல் மூலம் இரு சாராரையும் ஊக்கப்படுத்தலாம்.

பரிந்துரையில் பரிணமித்துள்ள கருத்துகள் கல்விச்சமூகத்தின் நம்பிக்கையையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கின்றன. கல்வி நிர்வாகம் தன் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்கள் மூலம் பரிந்துரைகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்துவதில்தான் இதன் வெற்றி தங்கியுள்ளது.

# சோமாலியாவில் சி. ஐ. ஏ. தோற்றது ஏன்

முகம்மது ஃபரா அய்டிற் கைது செய்யப்பட முடியாதது ஏன்:

வோசிங்டனின் வழமையான தந்திரங்கள்செயற்படவில்லை. மூன்றாம் உலக நாடுகளில் உளவு சம்பந்தமான தகவல்கள் பெறுவதற்குச் சி,ஐ.ஏ. அதிகாரிகள் அரசாங்க அலுவலகங்களுக்கு இலஞ்சம் கொடுப்பார்கள் தேசிய பாதுகாப்பு நிறுவனம் தொலைபேசிகளில் ஒற்றுக் கேட்கப்பட்டு புலனாய்வுத் தகவல்களைப் பெறும்- ஆனால் சோமாலியாவில் அரசாங்க உத்தியோகத்தரும் இல்லை- தொலைபேசிகளும் மிகக் குறைவே- அய்டிற்வானொலியில் அதிகம் பேசுவதில்லை- தூதுவர் மூலம் செய்திகள் அனுப்புவதையே விரும்புகிறார்- வானொலி ஒலிபரப்புகளின் நிலையத்தை கண்டுபிடிக்க அறிகுறிகளின் திசையைஅறியும் கருவிகளை அமெரிக்கர் பயன்படுத்துகின்றனர்- ஆனால் அய்டிற் குறைந்த வலுவுடைய, கொண்டு செல்லக்கூடிய வானொலிபரப்புக் கருவியைக் கொண்டு குழப்பமான முறைகளில் அதை இயக்குவதனால் அவரின் இடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது-

"குறைந்த தொழில் நுட்பம், உயர்ந்த தொழில் நுட்பத்திற்கு பிரச்சினையைக் கொடுக்கின்றன?" என பென்டகன் உதவியாளர் ஒருவர் கூறுகிறார்-

மக்கள் சபை புலனாய்வுக் கமிட்டித் தலைவர் டான் கிளின்மனின் கூற்றுப்படி, வாஷிங்டனின் ஒற்றுக் கேட்கும் தந்திரங்கள் யாவும் சோமாலியாவில் பயன்படவில்லை. தெற்கு மொகாடிசுவில் அமைந்துள்ள அய்டிற்டின் செயற்பாட்டுத் தளம் ஒரு பாதுகாப்பு வலயம்போல் உள்ளது. மற்றைய சிறு இனங்களில் இருந்து பெறப்பட்ட சி. ஐ. ஏ. ஊடுருவற்காரர் இதற்குள் புகப் பயப்படுகிறார்கள் அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் இது லெபனான் நாட்டு பெய்ரூட் சூழல்போல் உள்ளது" என்று கூறுகிறார்: பகைமை காட்டும் சிறு இன ஊடுருவற்காரர் இலகுவாகக்கண்டுபிடிக்கப்படுகிறார்கள்; அதேநேரத்தில் அமெரிக்கா காலாற் படையினரைப் போலவே சி ஐ ஏ அதிகாரிகளும் அபாயத்தை எதிர்நோக்குகிறார்கள். சென்றமாதத்தில் மறைந்திருந்துதாக்கியபொழுதுஒரு சி ஐ ஏ உத்தியோகத்தர் காயப்பட்டுள்ளார் எனநியூஸ் வீக் அறிகின்றது சோமாலியாவில் காயப்பட்ட இரண்டாவது சி ஐ ஏ உத்தியோகத்தர் அவராகும்

ஐ நா அமைதிகாக்கும் படையும், மற்ற நாடுகளும் உதவுவதாக இல்லை அவர்கள் தத்தமது உளவுச் சேவையில் நம்பியுள்ளார்கள். கிடைக்கும் தகவல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதுமில்லை

பொங்கும் மங்களம் எங்கும் தங்கும்!

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய

**தைத்திருநாள் வாழ்த்துக்கள்**

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட
முகூர்த்தப் பட்டுப்புடவைகள்
கூறைச்சேலைகள் மற்றும் ★ காஞ்சிபுரம்
பட்டுவேட்டி, சால்வைகள்
றெடிமேட் ஆடைகள்
யாவையும் வசதியாக ஒரே இடத்தில் எண்ணம் போல் தெரிந்து பெற்றிட

**சுகுணாஸ் புடவை மாளிகை,**

**கிருஷகா ஆடை அகம்**

29, 69ஏ, நவீன சந்தை, (சி-8354) யாழ்ப்பாணம்.



தைப்பொங்கல் வாழ்த்து

அன்பர்கள், ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எங்கள் அன்புகலந்த பொங்கல்
நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்
தரமான, புதிய வெளியீடுகளை
நீங்கள் பெற்றிட

**குணம்**

**வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-8356)



மங்களம் பொங்க மனையாட்சி சிறக்க
எங்கும் பொங்கலோ பொங்கல் என எல்லோரும் பொங்கி மகிழ

சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ் நிறுவனத்தார்

**வாழ்த்துகின்றார்கள்**

உங்களுக்குத் தேவையான சைக்கிள் உதிரிப்பாகங்களை
நீங்கள் ஒரே இடத்தில் பெற்றிட
நாடவேண்டிய இடம்

**சேது சைக்கிள் ஸ்ரோர்ஸ்**

54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
இத்தாபனம் வெகுவிரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(சி-8359)



வாடிக்கையாளர்கட்கு

**பொங்கும் மங்களம்**
**எங்கும் தங்குக!**

அழகுமிகு அச்சக வேலைகளுக்கு
எம்மை நாடுங்கள், ராஜா தியேட்டர்
அருகாமை அச்சக ஒழுங்கையில்
நடாத்தப்பட்டுவருவதே
மக்கள் அபிமானம் பெற்ற

**— ஸ்ரீலங்கா அச்சகம் —**

ஸ்ரீலங்கா புத்தகசாலைக்கும், ஸ்ரீலங்கா அச்சகத்தாருக்கும் எதுவித வியாபாரத்தொடர்பும் இல்லை என்பதை இத்தால் சகலருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(7200)



தை பிறந்தால் வழி பிறக்கும்

தமிழர் வீடுகளில் நெய் மணக்கும் திருநாளில்

**தித்திக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை**

வாடிக்கையாளர்கள் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.





❋ உங்கள் சைக்கிள் தேவைகளைப் பூர்த்திசெய்யவும்

❋ பலதரப்பட்ட சைக்கிள் உதிரிப்பாகங்கள்

மற்றும்

❋ பல வாணிபப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்

நீங்கள் பெற்றிட

**E. S. பேரம்பலம் அன் கோ**

50, கஸ்தூரியார் வீதி, (சி-8359) யாழ்ப்பாணம்.

(சிறுகதை)

# கொதிப்பு

## கருணை - ரவி

''அப்பா, என்னைப் பூநகரி காட்டக் கூட்டிக் கொண்டு போங்கோ---''

கதிரையிலிருக்கும் கனகசுந்தரத்தின் தோள்களை, இறுக அணைத்துக் கொண்டு அனுசியா கேட்கின்றாள். அவளின் அந்தக் கூற்றை செவிசாய்த்த கனகசுந்தரம், அதனைக் காதுகளில் வீழ்த்தாதவன் போல எதனையோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அனுசியா எதனையும் விரும்பிக்கேட்டால் அவளின் விருப்பத்துக்கு மாறாகநடவாதவன்-ஆனால் இதற்கு மட்டும் மௌனித்துப் போயிருக்கின்றான்.

அவனுக்கு விருப்பம்தான், அந்த வல்லை வெளியிலே பூநகரி வெற்றி விழாவுக்காக அமைக்கப்பட்டிருக்கும் பூநகரி இராணுவமுகாம் மாதிரி அமைப்பை கூட்டிக்கொண்டு போய்க் காட்டுவதற்கு! ஆனால், முடியாத நிலைமை தட்டித்தவறி அவன் அனுசியாவைக் கூட்டிக் கொண்டு போனான் என்றால் ஊருலகம் அவனைப்பற்றி என்ன மாதிரி எல்லாம் கதைக்கும்?

அவன் மனைவி புவனேசு செத்து இன்னும் எட்டுநாள் கூட போகவில்லை. நேற்று முதல் நாளுக்கு முதல் நாள்தான் அந்தக் கோர நிகழ்வு நிகழ்ந்தது...

அன்று அதிகாலை நான்கு மணி இருக்கும் கனகசுந்தரமும் மனைவி புவனேசும் மகள் அனுசியாவும் தங்களை மறந்து நித்திரையில் மூழ்கிக் கொண்டிருந்தவேளை, அவர்களின் அந்த நித்திரையை பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவிவிடப்பட்ட ஆட்டலறி செல்களின் வெடியோசைகள் குழப்பியது. நெஞ்சங்கள் அதிர நித்திரையை விட்டு எழுந்தவர்களின் இதயங்களை அச்சம் இறுக்கிப்பிடிக்க-

''வெளியிலை வாங்கோ வப்பா - கல்வீட்டுக்கை இருக்கக் கூடாதாம்! என்று சொல்லிக்கொண்டு புவனேசு வீட்டை விட்டு வெளியேறினாள். அனுசியா, கனகசுந்தரத்தை எழும்பவிடாது தோள்களை இறுகப் பிடித்துக் கொண்டிருந்ததனால் அவன் வெளியே எழும்பிச் செல்லவில்லை புவனேசு வீட்டின் முன் கோலைத் தாண்டி வெளி பிளாற்றடிக்குச் செல்ல ஒரு ஷெல் வந்து அந்தப் பிளாற்றுக்கு மேலே பெரிய சத்தமாய் வெடித்துச் சிதறியது புவனேசுவின் உடல் சின்னாபின்னமாகியது...

அந்தக் கோரநிகழ்வு அவனின் மனத்திரைகளிலிருந்து இன்னும் விலகவில்லை. எப்படி விலகும்? அவன், மனைவியையே நினைத்து வேதனைகளில் மூழ்கிக் கொண்டிருக்கும் வேளைகளில்தான் -அனுசியா பூநகரி பார்க்க என்று இழுக்கின்றாள்.

''அப்பா வாங்கோ பாப்பம். அங்கை பொம்மைகள் இருக்காம்! ஆமியளோடை புலிமாமாக்கள் சண்டையள் பிடிக்கினமாம்! கிளாலியிலை ஆமியள் வெட்டினதையும் காட்டினமாம்! வாங்கப்பா போய்ப் பாப்பம்''

மீண்டும் அனுசியா தகப்பனின் கைகளைப் பிடித்து இழுக்கின்றாள். அவளுக்கு எப்படி நிலைமைகளைச் சொல்லி விளங்கப்படுத்துவதென்றே அவனுக்குத் தெரியவில்லை. அனுசியாவும் அதனைப் புரிந்துகொள்ளுமளவிற்கு பக்குவமடையவில்லை. அவளுக்கு இப்பத்தான் ஐந்து வயது.

அவள் தாயை நினைத்து இரண்டு நாள்தான் ஓயாமல் அழுதாள். இப்போது நினைவுகள் வருமட்டுமே அழுவாள் அனுசியா மீண்டும் அடம் பிடிக்கின்றாள். கனகசுந்தரம் இன்னும் தனது மௌனத்தைக் கலைக்கவில்லை. குசினிக்குள்ளிருந்த அவனின் தாய் கற்பகம் கையில் தேத்தண்ணிக் கப்பை ஏந்திக் கொண்டு வந்து அவனுக்கு கொடுத்துவிட்டு-

''உவளுக்கென்னடா... நீ அங்கையுமிஞ்சையும் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டித் தான் உவளுக்குச் செல்லம். இன்னும் எச்சில்பாடே போகேலை அதுவின்ரை கவலையுமின்னும் துலையேலை...''

இமைகளை நனைத்துக் கொண்டு கற்பகம் குசினிக்குள் நுழைகின்றாள்... கனகசுந்தரத்தின்மனதில் புவனேசு உலா வருகின்றாள். அவள், அன்றொருநாள் சொன்ன வார்த்தைகளே அவனின் நெஞ்சினில்...

''இஞ்சேருங்கோ... எனக்கிப்ப காலம் கூடாதாம்! எனக்கேதும் நடந்து தெண்டால், என்ரை அனுசியாவை கண்கலங்க விடக்கூடாது. அவள் என்னகேட்டாலும் அவளின்ரை விருப்பப்படியே நீங்கள்நடக்கோணும் அவள் என்ரை உயிர்! நான் உங்களைப் பிரிஞ்சாலும் அவளின்ரை நெஞ்சுக்குள்ள தானிருப்பன்''.

கனகசுந்தரம் அனுசியாவைப் பார்க்கின்றான். அவள் சிணுங்கிக்கொண்டிருந்தாள். அவனை அறியாமலே அவனின் கண்களில் கண்ணீர்ப் பெருக்கு...

''ஏனப்பா அழுகிறியள்? அம்மா என்டால் என்ன எங்கை எங்கை எல்லாம் கூட்டிக் கொண்டு போவா... அம்மா... அம்மா...'' என்று உரத்தகுரல்எறிந்துஅனுசியா அழுகின்றாள். தனது கண்களைத் துடைத்த கனகசுந்தரம் அனுசியாவின் கண்ணீரையும் துடைத்துக்கொண்டு அவளைத் தூக்கி சைக்கிளில் ஏற்றினான். சைக்கிள் படலையைத் தாண்டிச் சென்று பூநகரி இராணுவ முகாம் தாக்கி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களின் உருவப்படங்கள் வைத்த பந்தலருகில் நிற்கின்றது.

''அப்பா இதுவே வல்லை?''

''இல்லை; இதுகளை பாத்துக் கொண்டுதான் அங்கை போகவேணும்''

என்று சொல்லிக் கொண்டு அந்தப் பந்தலுக்குள் நுழைகின்றான். அனுசியா, வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு மாவீரர்களினது படங்களையும் பார்த்து விட்டு, பந்தலை விட்டு வெளியேறும்போது,

''அப்பா...''

''ம்...''

''அம்மாவின்ரை படத்தையேன் பந்தலுக்கை வைக்கேலை?''

அவள் துருவ ஆரம்பிக்கின்றாள். அவள் அப்படித்தான் தெரியாததைக் கண்டாலும் அதனை அறியவேணும் என்ற ஆதங்கத்தோடு கேட்பாள். அவள் கேட்கும் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் பதில் கூறிவிடத்தான் வேணும் இது அவளுக்கு தாய் புவனேசு பழக்கிய பழக்கம். ஏதும் தெரியாததைக் கண்டால், அதனை அனுசியாவுக்குக் காட்டி அது என்ன என்பதனை விளக்கமளிப்பாள். ஏனென்றால், இப்படிச் செய்வதன் மூலம் சிறுவர்களின் புத்திக்கூர்மை விருத்தி அடையும் என்று! அவள் கற்றுக் கொடுத்த அந்தப் பழக்கத்தால்தான் அனுசியா அறியாததை அறியவேணும் என்ற ஆதங்கத்தோடு கேட்கின்றாள்:

''இதுக்கிளை அம்மாவின்ரை படத்தை வைக்கக் கூடாது'' அவன் பதிலளிக்கின்றான்.

அனுசியா, அவனின் சாரத்தை இறுகப் பிடித்துக் கொண்டு ''ஏன்?'' என்று கேட்டாள்.

''அவர்கள் இந்த மண்ணுக்காகப் போராடினவர்கள். அவர்களைத்தான்அதுக்கிளை வைக்க வேணும்.''

''ஏன் மண்ணுக்காகப் போராடினார்கள்?''

''இது எங்கடை மண்! இதைச் சிங்களவன், தான் ஆள ஆசைப்படுறான். அதுக்காகத்தான் எங்கடை மண்ணிலை முகாம்கள் அமைச்சு நெடுவலும் எங்களை அழிச்சுக் கொண்டிருக்கிறான். இவர்களை இந்த மண்ணிலை இருந்து அடிச்சுக் கலைக்கப் போராடித்தான் - அவர்கள் வீரச்சாவடைந்தவர்கள் அவர்கள்தான் மாவீரர்கள்! அவர்களின்ரைபடங்களைத்தான்அதுக்கிளை வைக்கோணும்.''

''அப்படியெண்டால், அம்மாவையேன் குண்டு போட்டுச் சாக்காட்டினவங்கள்? அம்மா அவங்களோடை சண்டை பிடிக்கேலைத்தானே...''

''ஆவங்களுக்குத் தமிழர் எண்டால் பிடிக்காது. அதுதான் குண்டுகளைக் கண்டபடி ஏவுறாங்கள்.''

வார்த்தைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டுக் கனகசுந்தரம் நடக்கின்றான் அனுசியா கேள்விகள் ஒன்றையும் தொடுக்கவில்லை. மௌனமாகவே அவனுக்குப் பின்னே நடக்கிறாள். அப்போது அவளின் கண்களில் பட்ட அந்த கருத்தோவியத்தை தகப்பனுக்குக் காட்டுகின்றாள். கனகசுந்தரம் அதனை இப்போது தான் உற்றுக் கவனிக்கின்றான்... அது ஆயிரத்தித் தொளாயிரத்தித் தொண்ணூற்றோராம் ஆண்டு முற்பகுதியில், மட்டக்களப்பில், வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த தமிழர்களைப் பிடித்து, கைகளைக் கட்டி, ரயர்களைக் கொளுத்தி கழுத்துகளில் போட்டு, சிலரை எரியும் சூடுகளில் தூக்கி எறியும் கோர நிகழ்வுகள்... அதனைத் துருவ ஆரம்பிக்க முன்னமே அனுசியாவுக்கு அவன் அதனை விளக்கமாகக் கூறுகின்றான்.

''இஞ்சையும் ஆமியள் வந்தாங்கள் எண்டால் உப்பிடித்தானே செய்வாங்கள்...?''

''ஓ!''

''உவங்கள் இஞ்சை வரக்கூடாது. உவங்களை இஞ்சை இருந்து துரத்த வேணும்.'' என்று ஆவேசமாக அவளின் குரல்கள் ஒலித்தபோது கனகசுந்தரத்தின் பார்வைகள் அடுத்த கருத்தோவியத்தில் பட்டதும் நெஞ்சில் ஒரு உதைப்பு!

அதேமாதிரி... இல்லை அதுதான்! இப்படித்தான் புவனேசு உடல் சிதறிக் கிடந்தாள். இப்படித்தான் நானும் மண்டையில் அடித்து மண்ணிலே புரண்டேன். இப்படித்தான் அனுசியாவும்......

இது அவன் வீட்டில் நிகழ்ந்த சம்பவமல்ல... அவன் வீட்டைப்போல் ஆயிரம் வீடுகளில் நிகழ்ந்த கோர நிகழ்வுகள் அது.

அவன் நினைவுகளில் அடிக்கடி புவனேசு வர ஆரம்பிக்கின்றாள். அவளோடு வாழ்ந்த வாழ்க்கைகளில் சில மறக்கமுடியாத சம்பவங்களை அவன் அசை போடுகின்றான்......

''அப்பா''

அனுசியாவின் குரல்கள் அவனின் சிந்தனைகளை சிதைவடைச் செய்கின்றது. அவனின் கண்கள் அனுசியாவைப்பார்க்கின்றது.சொண்டு துடிக்க வெம்பியவள் கைகளால் கண்களைத் துடைக்கின்றாள் அவனுக்கு விளங்கி விட்டது. மெதுவாக அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு நடக்கிறான்...

கால்கள் வல்லைவெளியில் அமைந்த பூநகரி இராணுவத் தளத்தின் மாதிரி அமைப்புக்குள் பிரவேசிக்கின்றன. இதுவரைக்கும் எதை எதையோ பார்த்தவர்கள் இப்போது இராணுவத்தையும் அவர்களின் நிலைகளையும் பார்க்கின்றனர்.

அதுதான் முதல்காவலரண்! அந்த அரணுக்குள் ஐந்தாறு இராணுவத்தினர் நவீன ஆயுதங்களுடன் தமிழ் மக்களை குறிபார்த்தபடி... அனுசியா இதுவரைக்கும் அவர்களைக் காணவில்லை. காவலரணுக்கு முன்னால் நீண்டு போகும் மின்சார வேலிகளையும், அந்த மின்சார வேலிகளை அறுத்து நிலையெடுக்கும் போராளிகளையுமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் அனுசியாவுக்கு அந்தக் காவலரணைக் காட்டுகின்றான்.

''உதாரப்பா...?''

''உவங்கள்தான் ஆமியள்''

என்று கூறுகின்றான். அனுசியா மௌனமாகின்றாள். ஆனால் மனதிற்குள் மட்டும் தன்தாயைக் கொன்றது உந்த ஆமியள்தான் என்பதை நினைத்துக் கொதிக்கின்றாள்.

''வா பிள்ளை...''

என்று சொல்லிக் கொண்டு கனகசுந்தரம் நடக்கின்றான் அம்புலன்ஸ் வண்டி ஒன்று கதறிக்கொண்டு வருகின்றது.

''கவனம் அனுசியா வான் வருகுது. பிராக்குப்பாராதை!''

என்று சொல்லிக்கொண்டு கனகசுந்தரம் திரும்பிப்பார்க்கின்றான் அனுசியாவைக் காணவில்லை. நெஞ்சு பதறி அடிக்கின்றது. சன நெருசலுக்குள் எங்கை தேடுவது? விழிகளை அகட்டி அங்குமிங்குமாய்பார்த்துக்கொண்டு வந்த வழிக்கு ஓடினான். அனுசியா, அந்த இராணுவத்தினர் இருந்த காவலரணுக்கு அருகில் இருந்த ஒரு பெரிய கல்லை முக்கி முக்கித் தூக்கிக்கொண்டு போய், அந்த அரணுக்குள் இருக்கும் இராணுவத்தின் தலைகளில் ''தொப்'' பென கல்லைப் போட்டாள். அந்த இராணு

(02 ஆம் பக்கம் பார்க்க)

## வரலாறு உன்னை அழைக்கிறது

எங்களது தேசமதில் அன்னியனின் சுவடுகள்
சிங்களனின் ஆக்கிரமிப்பால் சிதைகின்றது எம் தேசம்
சங்கங்கள் பல ஆண்ட செந்தமிழன் தீரம்
சிங்களனின் கொடுமையினால் மாண்டு போவதா?

மீண்டும் ஒரு சங்கமது மலர்கின்றதே இங்கு
மாண்டு போன எம்தீரர் புதைகுழிகளின் மேல்
கண்டு கொண்டும், ஏன் இங்கு தூங்குகிறாய் - நீயும்
விழித்தெழுந்து வாராயோ களமாடிட - இல்லை
அழித்தபின் தான் வருவாயோ கல்லறையைப் பார்த்திட
ஒளித்தொளித்து ஓடியது மலையேறியதே
அழித்திடுவோம் ஈனர்களை எம்மண் மீதிலே

சங்கங்கள் பலபாட அரசாண்ட எம்மினம்
அங்கங்கள் ஓய்வெடுக்க தூங்கியது சில காலம்
பங்கங்கள் வந்த பின்னும் தூங்கிடுமோ எம்மினம்
சிங்கங்கள் சிதறி ஓட சிரித்திடுமே புலிப்படை

பைந்தமிழின் வீரத்திற்கு பங்கம் வரவிடுவீரா?
சிந்திய குருதியெல்லாம் வீண் போகலாகுமா?
அந்தி விடியும் போது எதிரிப்படை ஓடுமா? - ஆம்
எந்தையரே வாரீர் களமாடிட ஓடி

அம்மா உனக்கு ஊட்டியதோ வீரப்பால்
சும்மா நீயும் இருப்பதோ சோர்ந்து போய்
கும்மாளம் போடும் கயவர்களை அழித்திட - உன்
அம்மா உனக்கு ஊட்டியது வீரப்பால் அன்றோ

சிந்தையிலே செந்தமிழன் தீரம் கொண்டு - உன்
சந்ததிக்காய் போராடி ஈழம் காணவா - வெறும்
மந்தைகளா நாம் - இல்லை பெரும் புலியினம்
நாமன்றோ

சொந்தங்களை விட்டு விலகிவா - நம்
சொந்த தேசம் எம்மை விட்டு விலகாமல்
இருப்பதற்காக

செந்தமிழன் தொன்மை வரலாறுதனைக்
காத்திட
உந்தனை வெங்களமாட அழைக்கிறது - ஆம்
வரலாறு உன்னை அழைக்கிறது - தமிழா
விரைந்து வா தொடர்ந்து செல் - எதிரியின் பாசறை
அழியும் வரை தூக்கத்தை மறந்து விடு.

தினேஸ் (செல்வன்)
வடமராட்சி.



பொங்கிடும் தமிழர் உணர்வுகள்
மங்கிடாது விளங்க

எம் இனிய
## பொங்கல் வாழ்த்துக்கள்



# சேரன்
# பல்பொருள் வாணிபம்

அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

கண்டி வீதி,
கொடிகாமம்.

காங்கேசன்துறை வீதி
சுன்னாகம்.

சேரன்
**விவசாய இரசாயன வாணிபம்**
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

யாழ்ப்பாணன்
**விற்பனை நிலையம்**
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

விக்ரர்
**இயந்திர உதிரிப்பாக வாணிபம்**
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

எழினி
**புடவை வாணிபம்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

கையேந்தும் நிலை களைந்து
நம்வளம் பெருக்கி
யாவரும் பலன் பெற்று
பெருமையுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.



வாடிக்கையாளர்கள்,
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எம் இனிய பொங்கல்
வாழ்த்துக்கள்

(இ-8357)

# "சத்திரசிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறையால் ஓய்வுபெறவேண்டிய வயதில் கூட மைபுரிகிறேன்"

**சத்திரசிகிச்சை நிபுணர் Dr. பொன்னம்பலம் அவர்களுடன் நேர்காணல்**

**- ரகுராம்**

அறுவைச் சிகிச்சைத் துறையில், பல ஆண்டுகால அனுபவம்பெற்றவரும், தனது 66-வது வயதிலும், இந்த மண்ணிலேயே சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் இலட்சிய நோக்குடன் சேவையாற்றி வருபவருமான Dr. பொன்னம்பலம் அவர்களை அண்மையில் சந்தித்தோம்.

அறுவைச்சிகிச்சைத் துறைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட Dr. பொன்னம்பலம் அவர்களை நேர்கண்டவற்றை இங்கே தருகிறோம்.

அவரது ஆரம்பக் கல்வி, அவர் பெற்ற உயர் கல்விகள் என்பவற்றைப் பற்றி கேட்ட போது,

இளவாலை மெய்கண்டான் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்றேன். பின் சென். ஹென்றீஸ் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தும் அங்கு கட்டணம் செலுத்தி கல்விகற்க குடும்ப பொருளாதார நிலை இடந்தராத பட்சத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் அதன் பின் யாழ். இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றேன். 1951 ஆம் ஆண்டு மருத்துவப் படிப்பிற்குத் தேர்வு பெற்று 1956ஆம் ஆண்டளவில் அதனைப் பூர்த்தி செய்தேன். சிறிது காலம் சிங்களப் பகுதிகளில் முதல் நியமனம் பெற்று சேவையாற்றினேன்.

மருத்துவத் துறையில் மேற்படிப்பினை இங்கிலாந்தில் பெற்று FRCS பட்டம் பெற்றேன். அதன் பின் குருநாகல், பதுளை போன்ற இடங்களில் பணிபுரிந்தேன் எனக் கூறினார்,

யாழ்ப்பாணத்தில் எந்தக் காலம் தொட்டு பணியாற்றுகிறீர்கள்? என்றுகேட்டோம்.

சிங்களப் பிரதேசங்களில் சேவையாற்றி வந்தபோது ஏற்பட்ட இனக்கலவரங்கள் என்னை யாழ்ப்பாணம் சென்று சேவையாற்றத்தூண்டின எனலாம். இந்த தமிழ்-சிங்கள முரண்பாடு தொடர்ந்தும் இவர்களுக்கென்ன சேவை செய்வது, யாழ். வந்து இலவசமாக என்றாலும் சேவையாற்ற வேண்டும் என்ற உணர்வினைத்தோற்றுவித்தன. இந்த உந்துதலினால் எழுபதின் பிற்பகுதி தொடக்கம் யாழ். போதனா வைத்திய சாலையில் பணியாற்றி வருகிறேன் என்று கூறினார்.

-எந்தச் சந்தர்ப்பங்களிலும் எந்த நேரத்திலும்பணியாற்ற அழைப்பு வரும் நிர்ப்பந்தம் இவ்வகையில் நீங்கள் ஒரு பொது உடைமையாக்கப்பட்ட நபராக இருப்பதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? என்று கேட்டபோது,

மருத்துவக் கல்வி கற்கும் போதே அந்த மனநிலை வந்துவிடும். நோயாளியின் நிலை, அவரது நலன் முக்கியமாகும் பட்சத்தில், மருத்துவரின் களைப்போ சலிப்போ பெரிதல்ல. அப்படியாக தொடர்ந்தும் பலமணி நேரங்கள் நாள் முழுதும் கூட சத்திர சிகிச்சை அறையில் சேவையாற்றியிருக்கிறேன். எனது மனநிலையைப் பொறுத்தவரையில் அந்த நேரத்தில் நோயாளியைக் கண்டவுடன் பசி, களைப்பு இல்லாமல் போய்விடும், நோயாளியின் நிலையே எனக்குப் பெரிதாக இருக்கும் என தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை துறையினைப் பொறுத்தவரை இங்குள்ள வசதிகள் வாய்ப்புக்கள் பற்றி வினவிய போது,

இலங்கையில் மற்றைய பாகங்களிலுள்ள வைத்திய சாலைகளுடன்ஒப்பிடும்போது வசதிகள் மிகக்குறைவென்றே கூறவேண்டும். இருக்கின்ற வசதிகளை வைத்துக் கொண்டே அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்கின்றோம், எங்களது துறையைவிட, நோயாளிகளை சத்திரசிகிச்சைக்கு தயாராக்கும் மயக்க மருந்து கொடுப்பவர்கள்(Anaesthetist) சிரமமான நிலையிலுள்ளார்கள். நோயாளியை மயக்கி, மீள உணர்வூட்டலுக்கான சாதனங்கள் கிடைக்கப் பெறுவது கஷ்டமான நிலையில் இவர்களுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நிலையே இப்படி உள்ளபோது மேற்கத்தைய மருத்துவ உலகின் வளர்ச்சியோடு எப்படி ஒப்பிடுவது? எனக் கூறினார் Dr. பொன்னம்பலம்

சத்திரசிகிச்சை நிபுணர்களைப் பொறுத்தவரையில் நிலை எவ்வாறு உள்ளது என்று கேட்டோம்.

நான்கு சத்திரசிகிச்சை நிபுணர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில் இருவரே பணியாற்றி வருகிறோம் சத்திர சிகிச்சைத் துறையில் பல காலமாக ஈடுபட்டு தகுதி பெற்ற சத்திர சிகிச்சை நிபுணர்களுக்கு இணையாக செயற்படக்கூடிய நான்குமருத்துவ நிபுணர்கள் மேலதிக பயிற்சிக்காக கொழும்பு சென்றுள்ளார்கள். இந்நிலையில் மொத்தமாக மூவரே பணியாற்றி வருகின்றோம்.பயிற்சி பெறச் சென்றவர்கள் மீளக்கடமைக்கு திரும்ப எடுக்கும் சில வருடப் பகுதிகள் பெரிதும் சிரமத்துக்குரியவை. இன்று எனது வயதிலும் 15 வருடங்களுக்கும் குறைந்தவர்களே சத்திர சிகிச்சைக்கு தகுதி பெற்றவர்களாக உள்ளனர். முன்பு என்றால் எனது வயதைஒத்தவர்களும், இரண்டு மூன்று வருடங்கள் இளையவர்களும் சேவையில் இருந்தார்கள். இப்போது இவ்வகையில் பெரியதொரு வெற்றிடம் நிலவுகிறது, இதனோடு மேற் பயிற்சி பெறச் சென்றவர்கள் மீள வர எடுக்கும் வருடங்களில் ஏற்படும் வெற்றிடமும்கவலை தரக்கூடியது. ஓய்வு பெறும் வயதையும் கடந்த நான் சேவையாற்றி வருகிறேன். எனது இடத்தை பதிலீடு செய்ய எவருமில்லாத நிலையில் நான் தொடர்ந்தும் பணியிலிருக்க வேண்டி இருக்கிறது என அவர் தெரிவித்தார்.

-யாழ் போதனா வைத்திய சாலையில்களப்பயிற்சிபெறும் மருத்துவ மாணவர்களில் ஒரு குழுவில் இடம் பெறக்கூடிய மாணவர் தொகையிலும் கூடிய தொகையினர் பயிற்சி பெறுதலைப் பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்ட போது,

இதற்குக் காரணம் சத்திர சிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறையும், மாணவர்களின் கல்வி ஆண்டுகளில் ஏற்பட்ட தடங்கல்களுந்தான். தகுதி பெற்றநான்கு சத்திரசிகிச்சை நிபுணர்களிடம் பயிற்சிபெற வேண்டிய இம்மாணவர்கள் இன்று இருவரிடமே பயிற்சி பெறுகிறார்கள். முன்னர் 40 மாணவர்கள், பத்துபேர்வீதம் ஒரு குழுவில்இடம்பெறஇன்று அதேவிதம்இருபதாக உள்ளது இது ஒரேகுழுவிலுள்ள எல்லா மாணவர்களையும் சீராக பயிற்சி பெறச் செய்வதில் தடையாக இருப்பது வெளிப்படையானது. என Dr. பொன்னம்பலம் அவர்கள் கருத்துக்கூறினார்.

-மேற்பயிற்சிக்காக முன்பு வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் அங்கு நிரந்தரமாக தங்கும் நிலையை பார்க்கிலும் இன்று இந்த மண்ணின் அவலங்களை நேரில் கண்டும் வெளிநாடுகளில் நிரந்தரமாக தங்கி விடும் மருத்துவ நிபுணர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்ட போது,

82ஆம் ஆண்டளவில்ஓமான் நாட்டில் எனக்கு வேலை கிடைத்தது. அச்சமயம் நான் அங்கு செல்லாமல் விட்டதற்கு காரணம் எனக்குப் பதிலீடாக இங்கு ஒருவரும் பணியாற்ற வராததே இது எனது மனப்பாங்கு மற்றவர்களின் மனப் போக்குகளை விமர்சிக்க நான் விரும்பவில்லை என தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தின் தற்போதைய கல்வித்துறை வீழ்ச்சி குறிப்பாக மருத்துவ மாணவர் தெரிவு வீழ்ச்சி பற்றி கருத்துக் கூறுகையில், திறமை இல்லையென்று கூற முடியாது, ஆயினும் சரியான முறையில் வழிகாட்டுவதற்கு, கற்பிப்பதற்கு வளங்கள் இல்லை. இன்றைய சூழ்நிலையில் கருத்தூன்றிப் படிப்பதற்கும் வாய்ப்பில்லை என்பனவும் இந்த வீழ்ச்சிக்கு காரணமாயிருக்கலாம் என Dr. பொன்னம்பலம் கூறினார்.

மருத்துவத் துறையிலான மேற்படிப்பு உங்களுக்கு எவ்வகையில் உதவியானதாக அமைந்தது என்று வினவிய போது FRCS பயிற்சியின் போது கற்றுத் தந்த அடிப்படையிலிருந்தான பயிற்சிகள் ஒரு பலமான அஸ்திவாரமாக அமைந்தது. அங்கு கற்பிக்கப்பட்ட வழிமுறைகள், இங்குள்ள இன்றைய வழிமுறைகளுடன் ஒப்பிடும் போது அந்தக் காலத்திலேயே தரமானதாக இருந்தது என அவர் தெரிவித்தார்.

உங்களது வாழ்வில் மறக்க முடியாதசத்திரசிகிச்சை அனுபவங்கள், அந்த நேரங்களில் உங்களது திறமையை நம்புவீர்களா? உங்களுக்கும் மேலான சக்தி ஒன்றும் இருப்பதாக எண்ணுவீர்களா? என்று கேட்டோம்.

மறக்க முடியாத அனுபவங்கள் என்னும் போது ஒவ்வொரு சத்திரசிகிச்சையும் ஒவ்வொரு உயிர்காப்புப் போராட்டம் தான். இவற்றில் எதைச்சொல்வது, எதை விடுவது, குருநாகலில் கடமையாற்றும் போது இருதயம் வரை கத்திக்குத்துக்கு இலக்கானவரை காப்பாற்றிய அனுபவம் முதல், இன்று நாளாந்தம் எறிகணை, விமானத்தாக்குதல்களினால் உயிருக்கு போராடிய பலரது உயிர்காப்புப் போராட்டங்கள், சாவுக்கு கிட்டச் சென்றவர்களை மீட்ட அனுபவங்கள் இவ்வாறு எத்தனையோ உண்டு. எனக்கும் மேலான சக்தி உண்டு.நானும் மனிதன்தான். எனது கடமையை நான் செய்வேன். கூடியளவு பிரயாசைப்பட்டு அவ்வுயிரைக் காக்கமுயற்சிப்பேன் என்னால் முடியுமட்டும் முயல்வேன் அதற்கும் மேல் ஆண்டவன் விட்ட வழிதான் என அவர்தெளிவாக,உறுதியோடு கூறினார்.

என்றாலும், என்னை மிகவும் பாதித்த பல சம்பவங்களில், இந்தியப்படையினரால், யாழ் போதனா வைத்திய சாலையில் நிகழ்த்தப்பட்ட கொடூர அழியாத வடுக்கள் என் நெஞ்சில் ஆழப் பதிந்து விட்டது அந்தச்சம்பவம்நடைபெற்ற சமயம் வைத்திய சாலையில் நான் இருந்தேன் கண்டபடி சுட்டுக்கொண்டு இந்தியப்படையினர் உள்நுழைந்த போது நானும் சிலருமாக, கதிர்ப்பட அறையினுள் ஒளிந்துகொண்டோம் துப்பாக்கி ரவைகள் பட்டு தண்ணீர் தண்ணீர் என அலறும் குரல்கள், கைகள் காப்பாற்றத் துடித்தாலும், உயிருக்குப் பயந்து எங்களால் எதுவும் செய்ய முடியாதநிலை, சத்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கிய துயரநிலை, இராணுவத்தினரின் நிர்ப்பந்தத்தால் உறவினர்களுக்குகூட தகவல் அறிவிக்காமல் சேர்ந்துபணியாற்றியமருத்துவர்களின்,அப்பாவிநோயாளிகளின் உடல்களை தீமூட்டி எரித்த கோரம், வீட்டில் எனது குடும்பத்தினர் உயிரோடுதான் உள்ளனரா என்பதை ஒரு வாரமாகியும் அறிய முடியாமல் எனது தவிப்பு, இவையெல்லாம் என்னை மிகவும் பாதித்தன என அவர் மேலும்கூறினார்.

அவரது தனிப்பட்ட வாழ்க்கையில் அவரது ஓய்வுப் பணிகள், ஈடுபாடுகள் பற்றிக் கேட்டபோது,

வைத்தியசாலை விட்டு வீடு வந்தால், கூடுதலான நேரம் புத்தகங்களை வாசிப்பேன் கர்நாடக சங்கீதத்தில் ஆர்வமுண்டு பாடத்தெரியாது. ஆனால் இரசனை உண்டு. நல்ல கச்சேரிகளை வானொலியில் கேட்பதற்கு பிடிக்கும் புல்லாங்குழலை ஓரளவுவாசிப்பேன் இந்த சங்கீத இரசனை சத்திரசிகிச்சை அறையிலும் எதிரொலிக்கும் சத்திர சிகிச்சை ஓய்வு நேரங்களில் என் வாய் என்னையறியாமல் பாடல்களை முணுமுணுக்கும் என்றார்.

உங்கள் மருத்துவத்துறை ஆர்வத்தினால் உங்கள் பிள்ளைகளையும் மருத்துவத் துறையில் ஈடுபட ஊக்கப்படுத்துவீர்களா?என்றபோது,

அவர்களுக்கு விருப்பமான துறைகளிலேயே அவர்கள் ஈடுபடவேண்டும். வற்புறுத்தி ஈடுபட வைப்பது சரியானதல்ல என அவர் கூறினார்.

அவரிடமிருந்து விடை பெறும்போதும், அவரது மனதின் ஏக்கமாக ஒன்று மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. மருத்துவத் துறையில் அதுவும் சத்திர சிகிச்சைத் துறையில் ஈடுபட்டு அன்றாடம் இரத்தத்தையும் சதையையும் பார்த்திருந்தும் இன்று கண்முன்னேதுடிதுடித்துச் செத்துப்போகும்அப்பாவி மக்களது உயிர்வதைக்கு விடிவு கிட்டாதா என்பதே அதுவாகும்.

## 75 வருடம் எரியுஞ்சுரங்கம்

இந்தியாவில் 75 ஆண்டுகளுக்கு மேலாக தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கும் நிலக்கரிச் சுரங்கமொன்றைக் காப்பாற்றும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இதில் கணிசமான அளவு வெற்றியையும் பெற்றுள்ளார்கள். 1916ஆம் ஆண்டு வடக்கு மாநிலம் தன்பாத்திலிருந்து 25 கிலோமீற்றர் தூரத்திலுள்ள 'பவுரா' நிலக்கரிச் சுரங்கத்தில் பிடித்த திடீர் தீயானது கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக அணைக்க முடியாமல் அருகருகே உள்ள ஜோக்தா, ஈஸ்ட்கத்ராஸ், நத்குர்கி, ராஜ்பூர், ஜோகிடு மற்றும் கூரி நிலக்கரிச் சுரங்கங்களுக்கும் பரவி கோடிக்கணக்கான தொன் நிலக்கரியை எரித்துச் சாம்பராக்கி விட்டது. விஞ்ஞானிகளின் அயரா முயற்சியால் இன்று பல பகுதிகளில் தீ அணைக்கப்பட்டு விட்டது.

உலக சரித்திரத்திலேயே இது போன்றதோர் மாபெரும் தீவிபத்து ஏற்பட்டதில்லை. இச்சுரங்கத்தில் தீவிபத்து ஏற்பட்ட காலத்தில் நிலக்கரிச் சுரங்கங்கள் யாவும் தனியார் வசமிருந்தன. அவர்கள் தீயை அணைப்பதற்காக மணலையும், தண்ணீரையும் இறைத்துப் பார்த்துத் தோல்வி அடைந்து தமது முயற்சியைக் கைவிட்டனர். இதனால் தீ கட்டுக்கடங்காது பரவத் தொடங்கியது.

பின்னர் இந்திய அரசாங்கம் பொறுப்பேற்று 1973இல் ரஷ்ய விஞ்ஞானிகள் குழு வரவழைக்கப்பட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் உருப்படியான பலன் எதுவும் கிட்டவில்லை. அமெரிக்க விஞ்ஞானிகளின் முயற்சியும் கைகூடவில்லை; பின்னர் இந்திய விஞ்ஞானிகளின் சுமார் 20 வருட கால முயற்சியில் தீ பெருமளவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இத்தீயை அணைக்கும் முதல் கட்ட முயற்சியாக சுரங்கத்திலிருந்து 46 கிலோமீற்றர் தூரத்திலுள்ள அணைக்கட்டிலிருந்து பெருமளவு சேறு கொண்டுவரப்பட்டு நெருப்பின் மீது கொட்டப்பட்டது. மேலும் அண்மையில் பெரும் குழாய்க் கிணறுகள் பல அமைக்கப்பட்டு விசேட நீர்த் துப்பாக்கிகள் கொண்டு துளைகளினூடாக நீர் பாய்ச்சப்பட்டது. மேலும் குழாய்கள் மூலமாக உள்ளிருக்கும் வெப்பக் காற்று வெளியே எடுக்கப்பட்டு குளிர்ந்த காற்று சுரங்கத்தினுள் செலுத்தப்பட்டது. தீ பரவி எரிவதற்குக் காரணமாக இருக்கும் ஒட்சிசன் வாயுவின் அளவும் குறைக்கப்பட்டு தீ மேலும் பரவுவது தடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ராட்சச புல்டோசர்கள், நவீன ரக கருவிகள் உதவி கொண்டு எரியும் நெருப்புக்குள் உட்புகுந்து அங்குள்ள நிலக்கரியை அள்ளி வருவதில் விஞ்ஞானிகளும்,தொழிலாளர்களும் ஈடுபட்டுள்ளனர்.

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்

### தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள்

### 17-01-94 திங்கட்கிழமை அன்று ஆரம்பமாகின்றன.

## 1. *Computer Processing Courses:*

### (A) CHILDREN'S COMPUTER STUDIES

- Talking Lesson
  Talking lesson one is an electronic teaching aid, combining traditional teaching methods with computer technology. Talking lesson one uses special audio/visual features like a verbal tutor, musical sound effects and L. E. D. display screen to teach spelling, maths, logic and music. Talking lesson one also serves as a first introduction to using computer.
- Introduction to Computers
- Disk Operating System (DOS)
- Introduction to Programming

Duration : 2 months

### (B) BEGINNER'S COMPUTER STUDIES

- Introduction to Computers
- Disk Operating System (DOS)
- Introduction to Programming
- Programming in BASIC Language

Duration : 4 months

### (C) ADVANCED COMPUTER STUDIES

- Disk Operating System (DOS)
- Introduction to Programming
- Programming in BASIC Language
- WORD Processing
- Advanced BASIC

Duration : 6 months

### (D) DIPLOMA IN COMPUTER STUDIES

- Disk Operating System (DOS)
- Introduction to Programming
- Programming in BASIC Language
- WORD Processing
- Systems Analysis and Design
- LOTUS 1-2-3
- Introduction to Popular PC Soft Ware

Duration : 9 months

- LECTURES By: S.R.Logendra D. C. A.
  (Systems Analyst)
  (M. C. S.)
- Equipment Used: LASER X T12, LASER X T13
  386 and Bitcom Computers
  (IBM Compatibles)
  (THEORY & PRACTICALS)

## 2. *Civil Draughtsmanship and Quantity Surveying*

Course Covers:

- Draughtsmanship
- Engineering Drawing
  1) Geometrical Drawing
  2) Mechanical Drawing
  3) Mechine Drawing
- Building Constructions
- Theory & Practical Drawing
- House Plans
  Single & Double Storey Buildings
- Civil Engineering Material
- Measurements of Building works, Electrical
- Estimating
- Fundamentals of Electricity
- Project
- Builders Quantity

Qualification : G. C. E. (O/L) Duration : 6 months

## 3. *CITY and GUILDS OF LONDON EXAMINATIONS YEAR* (94|95)

- Quantity Surveying (Part I & II)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

Qualification : C. C. E. (O/L) Duration : 6 months

## 4. SPECIAL ENGLISH CLASSES

இலக்கணத்துடன் க.பொ.த. (சா|த) மற்றும் சகலவிதமான பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகியகாலப் பயிற்சி நடைபெறும்.

Duration : 4 months

## 5 SPOKEN ENGLISH

சிறந்த முறையில் ஆங்கில அறிவையும் நன்றாக ஆங்கிலம் பேசுவதற்கும் ஏற்றவகையில் குறுகியகால பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

Duration : 3 months

## 6. TOEFL (Test of English as a Foreign Language)

- பரீட்சைக்கு ஏற்றவகையில் பயிற்சிகள் வழங்கப்படும்.
- பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

Duration : 4 months

## 7. Short Hand and Typing (English)

சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

- நீண்டகால பாடத்திட்டம்
- குறுகியகாலப் பாடத்திட்டம்

என்ற வகையில் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

## 8. Motor Mechanism

### - மோட்டார் வாகனம் திருத்துதல்

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்:-
(Motor Cycle, Water Pump, Generator, Car, Lorry Engines)
(மோட்டார் சைக்கிள்கள், நீர் இறைக்கும் பம்பிகள், ஜெனரேற்றர், கார், லொறி எஞ்சின்கள்)
(பெற்றோல், டீசல் இயந்திரங்கள் யாவும்)

- Petrol Engine :- Ignition System, Operation Maintenance and Care, Engine Overhauland Time Setting (Ignition System — Contact Braker and Electronic Systems)
- Diesel Engine - (Fuel injector system, design and Operational details)
- (Clutch, Brake, Steering, Suspension, Design and Operation)

அத்துடன் மோட்டார் வாகனங்களின் மின்சார உபகரணங்களைத் திருத்துதலும் மின்னேற்றலும் மின்சார இணைப்பும்.
(Motor Vehicle Electrical Equipment Repairing, Wiring System and Charging Systems)

- Lectures By : Mr. A. S. Gunaseelan
  (Automobile Engineer)

Duration : 6 months

## 9. ELECTRICAL WIRING

### - மின்சார இணைப்பு

இதில் உள்ளடக்கப்பட்ட பாடங்கள்:

- House wiring -- வீட்டு மின்சார இணைப்பு
- Industrial wiring - தொழிற்சாலை மின்சார இணைப்பு
  (Single phase & Three phase)

Duration : 3 months

## 10. MOTOR REWINDING

### - மோட்டர் ரீவைண்டிங்

- Fundamentals of Electricity
- Transformers
- Single phase Motor and Fans
- Magnet
- Armature
- Three Phase

Duration : 4 months

## 11. GENERAL ELECTRICIAN

### ஜெனரல் எலக்ரீஷியன்

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

- Fundamental of Electricity
  (DC Theory, Networks & AC Theory, Networks)
- Basic Electronics.
- Electro Magnetism & Coils
- Direct Current Machines
  (Dynamo & Motors Starters)
- Alternating Current Machines
  (Generator, Motor, Transformer)
- Domestic Electrical Circuits
  (Wiring & Automatic Controls)
- Electrical Circuits of Vehicle
- Three Phase
  (Electrical Lines, Motors & Generators)
- Electrical Circuits & Reparing of Aircondition & Refrigeration.

Duration : 6 Months

குறிப்புகள்:-

- அனைத்துப் பயிற்சிகளும் வாரநாள், வார இறுதி நாள் வகுப்புகளாக நடைபெறும்.
- அனைத்துப் பயிற்சி நெறிகளின் முடிவில் விளக்கப்பயிற்சி பரீட்சைகளும், செய்முறைப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டு சித்தியடைவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- அனைத்துப் பாடங்களுக்கும் தரமான விளக்கப் பயிற்சிகளும் தேவையான பயிற்சிகளுக்கு போதிய செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படும்.
- விண்ணப்பப் படிவங்களையும், பாடநெறிகளுக்கான கட்டணவிபரம் மற்றும் பாடத்திட்டங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு:

| | |
|---|---|
| பதிவாளர் | REGISTRAR |
| பற்றீஷன் உயர் கல்வி நிறுவனம் | Patrician Institute of Higher Studies |
| 59, சென். பற்றிக்ஸ் வீதி, | 59, St. Patrick's Road, |
| யாழ்ப்பாணம். | Jaffna. |

## வாகன தகுதிச் சான்றிதழ்-1994

## *FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE - 1994*

1994ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகனத் தகுதிச் சான்றிதழ் திரு. A. S. குணசீலன் (Automobile Engineer - Certifying Officer for Motor Vehicle Fitness) அவர்களால் எமது ஸ்தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

REGISTRAR
Patrician Industrial Institute
59, St. Patrick's Road,
Jaffna.

(சி-8345)

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு

**மங்களம் பொங்கிட தைமகள் வந்தனள்**

**வாழ்த்தி வரவேற்போம்**

எம்மிடம்
ஃ அலுமினியம், எவர்சில்வர் பாத்திரங்கள்
ஃ பீங்கான் கோப்பைகள்
ஃ அழகுசாதனப் பொருள்கள்
ஃ சிறுவர் சைக்கிள்கள்

யாவும்
ஒரே இடத்தில் பெற்றிட

**பெஷன் ஹவுஸ்**

65, கே. கே. எஸ். றோட்
யாழ்ப்பாணம்.

(சி-8332)

**பொங்கும் மங்களம்
எங்கும் தங்குக!**

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட

★ புதிய டிசைன் சாறிகள்
★ ஸ்கேட் அன்ட் பிளவ்சுகள்
★ சிறுவர்களுக்கான சூட்-கவுண்

அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

**மதுரா பட்டு மகால்**

**சோபனா ஆடை அகம்**

75, 16, கிராண்ட் பஜார் யாழ்ப்பாணம். (சி-8337)

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இதயம் கனிந்த

**பொங்கல் வாழ்த்துக்கள்**

❋ திருமணப் பட்டுப் பிடவைகளுக்குப்
பெயர் பெற்ற ஸ்தாபனம் ❋

**லலிதா**

**பிடவை மாளிகை**

இல: 5, 6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

(சி-3358)

**பொங்கும் மங்களம் வீடுகள் தோறும்
தங்கி நிலைத்திட வாழ்த்துகின்றோம்!**

○ சில்வர், ○ பித்தளை
○ அலுமினியம், ○ பிளாஸ்டிக் பொருட்களை

மொத்தமாகவும், சில்லறையாகவும் நிதான விலையில்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

**சில்வர் லைன்ஸ்**

இல. 164, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 8339)

**மக்களம் பொங்க மனையாட்சி சிறக்க
எங்கும் பொங்கலோ! பொங்கல்! என
எல்லோரும் பொங்கி மகிழ வாழ்த்துகின்றோம்**

கண் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கிணங்க
மூக்குக் கண்ணாடிகளையும் உங்களின் அழகான
முகத்திற்கு மேலும் அழகூட்ட நவீன டிசைன்களில்
மூக்குக்கண்ணாடி பிரேம்களையும் பெற நீங்கள்
நாட வேண்டிய இடம்

"விழி உங்களிடம்
அதன் ஒளி எங்களிடம்"

**எரிக்கணேஷ்**

மூக்குக் கண்ணாடி வழங்குபவர்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-8333)

**எங்கும் மங்களம் சிறக்க
எம் இனிய பொங்கல்வாழ்த்துக்கள்!**

❋ கூறைச் சாறிகள்
❋ காஞ்சிபுரம்
❋ தஞ்சூர் சில்க்
❋ ஆந்திரா சில்க்
❋ பட்டுவேட்டிகள்

இன்னும் பல!
முகூர்த்த பட்டுப் பிடவைகளுக்கு
கைராசியான நிறுவனம்

**கணேசன்**

**பிடவை மாளிகை**

201, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8334)

**உளம் கனிந்த பொங்கல்
நல்வாழ்த்துக்கள்**

உழவர் திருநாளாம் இன்று உவகை செறிந்த பொங்கல்
வாழ்த்துக்களை அனைத்து நெஞ்சங்களுக்கும் தெரிவிப்பதில்
மகிழ்ச்சி அடைகின்றோம்

○ ஜப்பானிய சாறிகள் ○ இந்தியன் சாறிகள்
○ றெடிமேட் ஆடைகள் ○ சிறுவர்களுக்கான
ஆடைகளுக்கு

**யோகாஸ் புடவை அகம்**

16B, பெரியகடை பஜார், யாழ்ப்பாணம்.

குறிப்பு:- வெகுவிரைவில் யோகாஸ் புடவை அகம் இல. 32 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் என்னும் இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.
(சி-8340)

**எங்கும் மங்களம் பொங்க எம் இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்**

நங்கையர் விரும்பும் நவநாகரிகத்திற்
கேற்ப சகலவிதமான சாறிவகைகள்,
றெடிமேட் ஆடைகள் மலிவாக
பெற்றுக் கொள்ள
இன்றே நாடுங்கள்

**முகுந்தாஸ்**

**பிடவை மாளிகை**

இல: 2, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி-8336)

தமிழ்மதி நகைமாடம்
ஆண்டு மூன்றில்
நீண்டு வளர
எமது நல்லாசிகள்.

அழகுநிலா நகைமாடம்
அன்பர்கள், ஆதரவாளர், வாடிக்கையாளர்களுக்கு
எம் இனிய
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
தரமான நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்

அழகுநிலா நகைமாடம்
213, கஸ்தூரியார் வீதி, (சி-8361) யாழ்ப்பாணம்.



மக்கள் மனதில் பதிந்த 3 ஆம் ஆண்டின் உதயம்
தொழிற்சுத்தம்! அழகின் உச்சம்!!

தமிழ்மதி நகைமாடம்
உங்கள் நம்பிக்கை எங்கள் நாணயம்
அழகு குன்றாத தரமான தங்க நகைமாடம்
எமது வளர்ச்சிக்கு ஆதரவு நல்கும் அனைவருக்கும்
எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

தமிழ்மதி நகைமாடம்
82/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:. இதுவரை நாள்காட்டி (கலண்டர்) பெற்றுக் கொள்ளாத வாடிக்கையாளர்கள் தங்கள் பற்றுச்சீட்டைக் காட்டி எம்மிடம் கலண்டரைப் பெற்றுக் கொள்ளவும். (சி-8360)



தமிழ்மதி ஆண்டு இரண்டை பூர்த்தி செய்து
மூன்றாம் ஆண்டில் நீண்டு வளர
வாழ்த்தும்

தமிழ்நிலா நகைமாடம்
பொங்கும் மங்களம் எங்கும் உண்டாக
எம் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

தமிழ்நிலா நகைமாடம்
பேருந்து நிலையம்,
நெல்லியடி, கரவெட்டி.
(சி-8364)



வளர்ச்சிக்கு வித்திடுவோம்
உயர்ச்சிக்கு கைகொடுப்போம்
3ஆம் ஆண்டில் கால் பதிக்கும்
தமிழ்மதி நகைமாடம்
பொலிவுற வாழ்த்துகின்றோம்

தமிழ்ப்பரிதி நகைமாடம்
தமிழீழ மக்கள் அனைவருக்கும் எம் இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
தென்மராட்சி மக்களின் தங்கநகைத் தேவைகளுக்கு

தமிழ்ப்பரிதி நகைமாடம்
15, புதிய சந்தை, சாவகச்சேரி. (இ-8362)



வாடிக்கையாளர்கட்கு
பொங்கல் நல் வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றார்கள்

கௌரி தொழிலகம்
சகலவிதமான சிங்கர் தையல் மெசின்களும், உதிரிப்பாகங்களும் விற்பனையாளரும், திருத்திக்கொடுப்பவர்களும்.
538, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (7201)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
புதுயுகம் தனில் மலரும் தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள்.
இல. 198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில்
அமைந்திருக்கும்

சுப்பஸோ வீடியோ - ஓடியோ சென்ரர்
ஸ்தாபனத்தார்

நித்த, நித்தம் புத்தம் புதிய காட்சியமைப்பைத் தொழில்திறன் வாய்ந்த மிகவும் துல்லியமான கலந்துறவாடும் இயந்திர (Mixing Camera) ங்களைக் கொண்டு நிகழ்ச்சிகளைத் தரம் பிரித்துணரும் வண்ணம் அமைத்துத் தருபவர்கள்.

அத்துடன் பழைய, புதிய படப் பாடல் பதிவுகளுக்கும், பழைய, புதிய படங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்,

சுப்பஸோ வீடியோ - ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-8367)



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் இனிய
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

இளந்தென்றல்
படப்பிடிப்பாளர்
14, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-8355)



மூன்றாம் அகவையில்
கால் பதிக்கும்
தமிழ்மதிக்கு
எமது நல்லாசிகள்

வான்மதி நகைமாடம்
பொங்கலோ பொங்கல் என பொங்கிமகிழ
அனைத்துத் தமிழ்நெஞ்சங்களுக்கும்
எம் பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
நுணுக்கமான கைவண்ண
தங்க நகைகளின்
எழில்மாடம்

வான்மதி நகைமாடம்
171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-8363)

# தொண்டமான் - செல்லச்சாமி சமரச முயற்சி; பின்னணியில் நடந்தது என்ன?

மக்களின் சார்பாக நியாயமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, அக்கோரிக்கைகளின் நியாயம் மறுக்கப்பட முடியாததுஎன்பது வெளிப்படுத்தப்படும்போது அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதைத் தவிர்ப்பதற்கு அல்லது கோரிக்கைகளை ஏற்க மறுப்பதற்கு கோரிக்கைகளை முன்வைக்கும் சக்திகளை பலவீனப்படுத்துவது அரசியலில் சர்வசாதாரணம். அதுவும் சிறிலங்காவின் வரலாற்றில் இது அடிக்கடி இடம் பெற்றுவரும் வாடிக்கையானதொன்று. மேலும் குறிப்பாக தேசிய இனங்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களில் சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் இதனை மிகக் கவனமாகவே நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தந்தை செல்வநாயகத்துடனும், ஜீ.ஜீ. பொன்னம்பலத்துடனும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தோற்றுவித்த மூலவர்களில் ஒருவரான தொண்டமான் தமிழ்மக்களின் எண்ணவேட்கையான தமிழீழக் கோரிக்கையை ஏற்க மறுத்ததும் மலையகத் தமிழர்கள் பெரும்பான்மை சிங்கள மக்களுடன் மோதத் தயாராக இல்லைஎன்றும், சிங்கள மக்களோடு இணங்கிப் போகவே விரும்புகின்றனர்!என்றும் கூறியதும் பழைய சங்கதி.

சுமார் 17 வருடங்களுக்கு முன்பு அரங்கேற்றிய இக் காட்டிக் கொடுப்பின் பயனாக ஐ. தே. க. வில் இணையவும் அமைச்சர் பதவியைப் பெறவும் தொண்டமானுக்கு சந்தர்ப்பம் வாய்த்தது. ஆனால் இன்று அதே வகையான காட்டிக்கொடுப்பிற்கு ஆளாகி தனிமைப்படுத்தப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. சிறிலங்காவின் சிங்கள அரசுகளுடன் பேரம் பேசி உரிமைகளை நிலைநாட்டலாம் என்ற அவரது தத்துவம் இன்று கேலிக்கு உரியதாகி - 45 வருடங்களாக அவரது நம்பிக்கைக்குரியவராகவும், இ.தொ. காவின் பொதுச் செயலாளராகவும் இருந்த செல்லச்சாமியுடன் மோத வேண்டிய நிலைக்கு உள்ளாகி - இருக்கின்றது: இந்த நிலை எவ்வாறு? எப்படி? ஏற்பட்டது என்பது இன்று இரகசியமானதல்ல:

## ஐ.தே.க - இ.தொ.கா முறுகல் ஆரம்பம்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் எதிர்பாரா மறைவைத் தொடர்ந்து விபத்தாக பதவிக்கு வந்த கண்டிய சிங்களவரான டி.பி. விஜேதுங்க சிங்கள பௌத்த பேரினவாதத்தின் காவலனாகத் தன்னை நிலை நிறுத்த முற்பட்டதும், மலையகத்தின் காவலனாகத் தன்னை உருவாக்க எண்ணியதுமே மலையக தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவராக தன்னைக் கருதி வந்த தொண்டமானுக்கும், அதாவது இ.தொ.கா - ஐ.தே.க உறவின் முறுகல் நிலைக்கு வித்திட்டது. இது மாகாண சபைத் தேர்தலையடுத்து மத்திய மாகாண சபையில் அமைச்சரவை நியமனத்தின் போது முதன் முறையாகப் பகிரங்கமாகியது. மத்திய மாகாண சபையின் 'கல்வி அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படாத போது இ.தொ.கா கடுமையாகக் கண்டித்தது. இந்தக் கண்டனத்தையடுத்து கல்வி அமைச்சு சிங்களம், தமிழ், முசுலிம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டு தமிழ்ப் பாடசாலைகளின் கல்விப் பொறுப்பு இ,தொ.காவின் உறுப்பினர் எஸ். சதாசிவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் கல்வி அமைச்சுப் பொறுப்பை முழுமையாக இ.தொ.கா கோரியதால் அமைச்சர்களின் சத்தியப் பிரமாண வைபவத்தின் போது சதாசிவம் கலந்து கொள்ளவில்லை- பின் திரை மறைவில் எடுத்த முயற்சிகளால் சதாசிவம் பதவியேற்ற போதும் கசப்புணர்வுகள் மறைந்திடவில்லை-

இதேவேளையில் பெருந்தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டதால் எழுந்த நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேணவாக்கள் திருப்தி செய்யப்படாத நிலைமைகள், இவற்றால் எழுந்த நெருக்கடிகள் - தொழிலாளர்களின் போராட்டங்கள் என்பவற்றின் காரணமாக இ.தொ. காவின் தலைமைத்துவம் நெருக்கடிக்கு உள்ளாகி வந்தது- தொடர்ந்தும் ஐ தே.க வுடன் உறவைப் பேணவேண்டுமாயின் தொழிலாளர்களின் விருப்புக்களைப் பூர்த்தி செய்ய இயலாமல் தலைமைத்துவத்தை இழக்க நேரிடும் ஆபத்து ஒரு புறமும், ஐ.தே, கவுடனான உறவைத் துண்டிப்பதால் எழும் அரசியல் சிக்கல்கள் மறுபுறமாக இ, தொ. காவின் நிலை இருதலைக்கொள்ளி போலாகிறது, இந்த நிலைமைகள் படிப்படியாக வளர்ச்சி பெற்றதன் விளைவாகவே தொண்டமான் சில .கோரிக்கைகளை முன் வைத்து அரசுடனான இ.தொ.காவின் உறவு மறுபரிசிலனை செய்யப்படும் என்ற எச்சரிக்கையுடன் காலக்கெடுவும் முன்வைத்தார்.

ஆளுங்கட்சியுடனும், அரசாங்கத்தோடும் தமது கோரிக்கை குறித்து இ. தொ. கா பேரம் பேசுதலில் ஈடுபட்ட அதே சமயம் மத்தியமாகாண சபையில் எதிர்க்கட்சிகளை ஆதரிக்க முடிவு எடுத்தமையால் முறுகல்நிலை உச்சம் பெற்றது- மத்திய மாகாண சபை எதிர்க்கட்சிகளை ஆதரிப்பதற்கு தொண்டமான் முடிவு எடுத்தபோதும் அதற்கான காரணங்களை விளக்கி கட்சி உறுப்பினர்களின் ஏகமனதான ஆதரவைப் பெற, அவர் தவறிப் போய்விட்டார்.இதேவேளை தொண்டமானுக்கு எதிராக இனத்துவேசப் பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டதும், மறைமுகமாக காட்டப்பட்ட மிரட்டல்களாலும், பண ஆசை, பதவி ஆசை என்பன ஊட்டப்பட்டதாலும் இ. தொ. கா. உறுப்பினர்கள் மத்தியில் ஊசலாடும் நிலை தோன்றியது. இது தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் இடையிலான பலப் பரீட்சைக் களத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

இவ்வாறான நிலைமைகள் இ. தொ. காவின் உள் விவகாரங்களில் ஐ. தே. க. கலையிடும் நிலைவரை இட்டுச் சென்றது. இ. தொ.கா. வின் பொதுச் செயலாளர் எம். எஸ்- செல்லச்சாமியை இடை நிறுத்தவும் மத்திய மாகாணசபை அரசை ஆதரிக்க முடிவு செய்த எட்டு மாகாணசபை உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்கவும் ஜனவரி 2-ல் அட்டனில் கூடிய இ.தொ.க.வின் தேசிய சபை முடிவு செய்தது- இதனைத் தொடர்ந்து இ- தொ- கா- வின் நிதிச்செயலாளரும், தொண்டமானின் பேரனுமாகிய ஆறுமுகம் தொண்டமான் நிதி மோசடியில் ஈடுபட்டதாகப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்திய எம். எஸ்- செல்லச்சாமி தேசிய சபை முறையாகக் கூட்டப்படவில்லை எனக்கூறி அதன் முடிவுகளுக்குக்கட்டுப்பட பகிரங்கமாக மறுத்ததைத் தொடர்ந்து இ- தொ- கா- வின் பிளவு அம்பலமாகியது-

## பிளவைச் சீராக்க முயற்சி!

இ- தொ- கா- பிளவுபடக் கூடாது என்று விரும்பிய சக்திகள் தொண்டமானுக்கும்செல்லச்சாமிக்கும் இடையில் இணக்கமான சூழலை ஏற்படுத்த முயன்றன.

காலிமுகக் ஹோட்டலில் விசித்திரமாக முடிவடைந்த செய்தியாளர் கூட்டத்தின் முடிவு பிளவை சீராக்கும் முயற்சிகள் சீர்குலைந்து விட்டதை காட்டும் நிகழ்ச்சியாகும் எனினும் இந்த செய்தியாளர் மாநாட்டின் முன்பாக நடந்த நிகழ்ச்சிகள் சுவாரஸ்யமானவையாகும் ஜனவரி 3ஆம் திகதியன்று அகன்கமவிலுள்ள தனது தேயிலைத் தோட்டத்திலிருந்து கொழும்புக்கு விரைந்த ஹேர்மன் மலிங்கா குணவர்த்தனா தொண்டமானுக்கும் செல்லச்சாமிக்கும் இடையிலான சமரசமுயற்சியில் ஈடுபட்ட முதல் மனிதர் என்படுகிறது

மலையகப் பகுதிகளில் தீவிரவாத சக்திகளின் ஊடுருவலுக்கு இடமளிக்கக்கூடாது என்ற வகையில் இ. தொ.கா தனது பிளவை சரிசெய்து கொள்ள வேண்டிய அவசியத்தை ஒரு சிங்களவர் என்ற வகையில் வலியுறுத்துவதாக குணரத்தின தெரிவிக்க,அதற்காகவே மலையக மக்களின் நலன்கள் தொடர்பான சில கோரிக்கைகளை முன்வைத்துப் பெற்று மலையகத்தில் அமைதியைப் பேண விரும்புவதாகக் கூறிய தொண்டமான், அரசாங்கம் அதற்கு இடமளிக்காமையினாலேயே தற்போதைய நிலை தோன்றியதாகவும் குறிப்பிட்டார் அத்துடன் பொதுச் செயலாளர் செல்லச்சாமியுடன் இணக்கத்தை ஏற்படுத்ததயாராக இருப்பதாகவும் எனினும் மத்திய மாகாண சபையில் அரசை ஆதரிக்க முற்பட்ட எட்டு உறுப்பினர்களையும் விலக்க வேண்டும் என்றும் தொண்டமான்தெரிவித்தார்

நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர்செல்லச்சாமியை சந்திக்க தொண்டமான் இணக்கம் தெரிவிக்க குணரத்தினா, கிறகரி அவென்யூவிலுள்ள செல்லச்சாமியின் இல்லத்துக்கு விரைந்தார். அங்கு ஹங்குரான் கெத்த பகுதியைச் சேர்ந்த அலெக்சி எல்லாவெல, சட்டத்தரணி ஜெயாபெரிசுந்தரம் போன்றோரும் இத்தகைய சமாதானத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். தொண்டமானைச் சந்தித்துப்பேச இணக்கம் தெரிவித்த செல்லச்சாமி தனக்கு ஆதரவான எட்டு மாகாணசபை உறுப்பினர்களையும் தம்மால் கைவிட முடியாது என்றும் வலியுறுத்தினார். இந்தச் சந்திப்பு தனது அமைச்சு அலுவலகத்தில் நடைபெற வேண்டுமென தொண்டமான் வலியுறுத்த நடுநிலையான ஓரிடத்தில் தான் சந்திக்க வேண்டும். என்று செல்லச்சாமி, விரும்பினார். எட்டுஉறுப்பினர்கள்சகிதமாக செல்லச்சாமி தொண்டமானைச் சந்திக்க முற்பட தொண்டமான் துரோகிகளை சந்திக்கமாட்டேன் என்று மறுக்க சமரச முயற்சி முட்டுக்கட்டை நிலைக்கு உள்ளாகியது. எனினும் ஜெயா பெரிசுந்தரம், எல்லாவெல மற்றும் இ. தொ. காவின் தொழிலுறவுச் செயலாளர் ஹரி சந்திரசேகர போன்றோர் தொடர்ந்தும் செல்லச்சாமியுடன் பேசி இணக்கப்பாட்டிற்கு முயற்சித்தனர். செல்லச்சாமியின் சம்மதம் பெறப்பட்டு ஜனவரி 4இல் சந்திப்புக்கு நேரமும், இடமும் ஒதுக்கப்பட்டது- சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த அதே சமயம் சமாதான முயற்சியாளர்களுக்குக் கூட தெரியாமலே செல்லச்சாமி நீதிமன்றத்தை நாடி இ. தொ. கா அலுவலகங்களுக்கு தான் செல்ல இ.தொ. கா விதித்த தடைக்கு எதிராக இடைக்காலத் தீர்ப்பை பெற தனது சட்டத்தரணிகளைத் தூண்டினார். இந்த நிலையில்தான் பொதுச்செயலாளரின் அலுவலக அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த ஆவணங்கள் சூறையாடப்பட்டன- இது தொடர்பாக செல்லச்சாமி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்- இந்தச் சம்பவங்களால் சமாதான முயற்சிகளில் மீண்டும் தடங்கல்கள் ஏற்பட்டது.

ஜனவரி 4-ம் திகதியன்று காலையில் சமாதான முயற்சியாளர்கள் மீண்டும் கூடி தமது நடவடிக்கைகளின் அடுத்த கட்டம் பற்றி விவாதித்தனர்- இதைத் தொடர்ந்து குணரத்தினாவும், ஹரி சந்திரசேகரவும் தொண்டமானின் அமைச்சு செயலகத்திற்கு செல்ல, எல்லாவெல செல்லச்சாமியின் வீட்டிற்கு விரைந்தார். எல்லாவெலவும், குணரத்தினாவும் செல்டெல் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது சந்திப்புக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எனினும் செல்லச்சாமி தனது நீதிமன்ற முறையீட்டை மீளப் பெற வேண்டுமெனத் தொண்டமான் நிபந்தனை விதித்தார். குணரத்தினாவும், எல்லாவெலவும் செல்லச்சாமியின் வீட்டிற்குச் சென்றபோது சட்டத்தரணி ஜெயாபெரிசுந்தரமும், வல்வின் குணதிலக்கவும் அங்கிருந்தனர்.

இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இ. தொ. கா அலுவலகத்தில் செல்லச்சாமிக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பப்படுவதாகவும், செல்லச்சாமியைக் கண்டிக்கும் சுவரொட்டிகள் காணப்படுவதாகவும் செல்லச்சாமிக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது- இதேபோன்ற தகவல்கள் தொண்டமானுக்கும் கிடைத்தது. இந்தநிலையில் இ. தொ காவின் தலைமையகத்தில் காணப்பட்ட மத்திய மாகாண உறுப்பினர் கந்தசாமி செல்லச்சாமி நீதிமன்றத்திற்குச் சென்றதை எதிர்த்தும், இதொ காவின் உள்விவகாரங்களில் தலையிட நீதிமன்றத்திற்கு உரிமையில்லை என்றும் கருத்துக் கூறிக் கொண்டிருந்தார். அப்போது கந்தசாமி தாக்கப்பட்டதுடன் கத்திவெட்டுக் காயத்திற்கும் இலக்கானார். செல்லச்சாமி இ.தொ.கா அலுவலகத்தில் நடைபெறும் சமபவங்களைக் கட்டுப்படுத்தும்படி கொள்ளுப்பிட்டி பொலிசாரைக் கேட்டுக் கொண்டார். இச் சமயத்தில் தில் நீதிமன்ற உத்தரவின்படி தாம் அலுவலகம் செல்ல அனுமதிக்கப்பட்டாலேயே சந்திப்பு சாத்தியமாகும் என்று செல்லச்சாமி வலியுறுத்தத் தொடங்கினார்.

தொண்டமானின் செயலாளர் திருநாவுக்கரசுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட குணரத்தின இ. தொ. கா. அலுவலகத்தில் கூடியிருந்தோரையும், கந்தசாமி தலைமையிலான ஆர்ப்பாட்டக்காரர்களையும் கலைந்து போகும்படி கேட்டுக் கொள்ளச்சொன்னார். செல்லச்சாமியின் பிரதிநிதி ஒருவரும் எல்லாவெலவும் இ. தொ. கா. தலைமயகத்திற்கு சென்று பார்வையிட்டபின் வந்து சொன்னவற்றை ஏற்ற செல்லச்சாமி சந்திப்புக்கு இணங்க தொண்டமானின் ஏற்பாட்டில் தாஜ் சமுத்திரா ஹோட்டலின் 151 அறையில் சந்திப்புக்கான துரித பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

செல்லச்சாமி இந்தப் பேச்சுவார்த்தைக்காகப் புறப்பட்டபோது அதிமுக்கிய பிரமுகர் ஒருவரிடம் இருந்து தனது ஆதரவு செல்லச்சாமிக்கு இருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது இந்த வேளையில் கண்டியில்கூடியஐ.தே.க குழுவினர் தொண்டமானின் விசுவாசியான சதாசிவம் மத்திய மாகாண சபை அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டதாகவும்,அவரது இடத்திற்கு கதிரேசன் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்தது. இத்தகவல் கொழும்புக்கு உடனடியாகவே கிடைத்ததும் இ தொகா தேசிய சபையின் முடிவுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும் எனவும் சமாதானத்திற்கு அதுதான் முன்நிபந்தனை எனவும் தொண்டமான் வலியுறுத்தினார். இந்தப் பேச்சுக்களில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படாத போதும் மீண்டும் நான்கு மணிக்கு சந்திக்க இருவரும் இணங்கினர். மீண்டும் நான்கு மணிக்கு சந்திப்பிற்காக செல்லச்சாமி அமைச்சு அலுவலகத்திற்கு வந்தபோது அவருக்கு சில மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

செல்லச்சாமி டிசம்பர் 30-ம் திகதி இலங்கை வங்கி முகாமையாளருக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து ஜனவரி 4 செவ்வாய்க்கிழமையன்று தமது கணக்கிலிருந்து நிதி எதுவும் பெறப்படுவதை ஆட்சேபிக்கும் கடிதமொன்றை எழுதினார்.

இக்கடிதத்தின் பிரதி நிதிச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமானுக்கு அனுப்பப்பட்ட போதும் அதற்கு முன்பாகவேஅவர் வங்கியிலிருந்து பணம் பெற்றுக் கொண்டுவிட்டார்- இந்த நேரத்தில் மத்திய மாகாண ஆளுநர் சதாசிவம் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக கதிரேசன் நியமிக்கப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவித்ததும் தொண்டமான் ஆத்திரமுற்றார்.

கதிரேசன் பதவி ஏற்கக் கூடாது என்று சமாதான முயற்சியாளர்கள் தெரிவித்த போது அது ஐ.தே.க சம்பந்தப்பட்ட விடயம் தான் எதுவும் செய்வதற்கில்லை என்று செல்லச்சாமி கைவிரித்துவிட்டார்.

உடனடியாகவே தமது ஆத்திரம் அனைத்தையும் கொட்டி ஐதே.க விற்கு கடிதமொன்றை எழுதிய தொண்டமான் அதனை ஐதே.க செயலாளர் சிறிசேன குரே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கே. என். சொக்ஸி போன்றோருக்கு அனுப்பி வைத்தார். ஆனால் இக்கடிதம் ஐ.தே.க தலைவரான டி.பி. விஜேதுங்கவிற்கு அனுப்பப்படவில்லை.

5ஆம் திகதி புதன் கிழமை வழமை போல அமைச்சர

**இளையவன்**

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய விமானத்தைக் கடத்த பல்கலைக் கழக மாணவன் முயற்சி

(டில்லி)

சென்னை - கோழிக்கோடு இந்தியன் ஏயர் லைன்ஸ் விமானத்தை நேற்றுக் கடத்திச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாக ஏயர் லைன்ஸ் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பெங்களூரில் இருந்து சுமார் 80மைல் தொலைவில் விமானம் பறந்து கொண்டிருந்த போது பல்கலைக்கழக மாணவர் ஒருவர் அதைக் கடத்திச் செல்ல முயற்சி செய்ததாக இந்தியன் ஏயர் லைன்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சில குண்டுகள் தன்னிடமிருப்பதாக அந்த மாணவர் கூறினார். எனினும் இந்த விமானம் பெங்களூர் விமான நிலையத்தில் இறங்கிய உடனேயே பாதுகாப்பு அதிகாரிகள் மாணவனை மடக்கிப் பிடித்தனர். விமானத்தில் பயணம் செய்த 56பயணிகளும், இரண்டு விமான ஓட்டிகளும், ஆறு விமானச் சிப்பந்திகளும் பத்திரமாக இறக்கப்பட்டனர்.

## போக்கு வரத்து ஒழுங்கு

வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களுக்கான போக்கு வரத்து ஒழுங்குகள் செய்யப்பட இருப்பதால் அனைத்து மாணவர்களையும் நாளை சனிக்கிழமை காலை ஒன்பது மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் கூடுமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

## காஞ்சிப்பெரியவர் ஆராதனை

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தில் காஞ்சிப் பெரியவரின் ஆராதனைபூஜை இன்று மாலை 4 மணிக்கு பஜனையுடன் ஆரம்பமாகும். இத்தினத்தில் ஹாட்லிக் கல்லூரியில் அதிவிசேட (4 ஏ) சித்தி பெற்ற மாணவன் செல்வன் ஜெ. ஜெகச்செல்வனுக்கு ஆசி வழங்கப்படும் திரு.வ.கு. கணபதிப்பிள்ளை மற்றும் ஆச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் சிறப்புரை ஆற்றுவர். (யோ)

## பீரங்கித்

ஆபத்து தவிர்க்கப்பட்டது வைத்திய சாலைமீது தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ஷெல் குண்டு வைத்திய அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. அதேசமயம் பருத்தித்துறை கிராமிய அரசினர் வைத்திய சாலையின் மதில், கூரைப் பகுதிகளும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலை மீது சிறிலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை மேற்கொண்ட ஷெல் தாக்குதலை கண்டித்து வைத்தியபொறுப்பு அதிகாரி, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கும் அதிகாரிகளுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (யோ)

## தொண்டமான்

வைக் கூட்டம் நடந்தது. தொண்டமானும் கலந்து கொண்டார். ஆனால் மத்திய மாகாண விவகாரம் எதுவும் பேசிக் கொள்ளப்படவில்லை. அன்றுமாலை தொண்டமான் அமைச்சு அலுவலகத்திற்கு வந்த போது அங்கு செல்லச்சாமியுடன் மாகாண சபை உறுப்பினர்களான அருள்சாமி, தங்கவேலு, கந்தையா, வெள்ளையன், நடராசாபிள்ளை ஆகியோர் காத்திருந்தனர். அன்றைய சந்திப்புக்கு பத்திரிகையாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். தேசிய சபையின் முடிவுக்கு கட்டுப்பட்டு அனைவரும் பதவி துறக்க வேண்டுமெனத் தொண்டமான் வலியுறுத்த, அதனை அவர்கள் 'பொறி'யாகக் கருத தொண்டமான் கால அவகாசம் வழங்கிய நிலையில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.

இந்த பத்திரிகையாளர் மாநாடு முரண்பாடுகளை தெளிவாக அம்பலமாக்கி விட்ட நிலையில் செல்லச்சாமி ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவை சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பதுடன் ஜனவரி 27இல் மாத்தளையிலும் தொடர்ந்து மலையக நகரங்களிலும் பொதுக்கூட்டங்களை நடத்தி தமது நிலைப்பாட்டை விளக்க மத்திய மாகாண முதல்வரினதும் மாகாணசபை சபா நாயகரதும் உதவியை நாடியுள்ளார்.

ஆக இ. தொ. கா. என்ற மலையக மக்களின் பலம் பொருந்திய தொழிற்சங்கத்தில் பிளவு ஏற்படுத்தப்பட்டு விட்டது. இப்போது மலையக மக்களின் நலன்கள் தொடர்பான கோரிக்கைகள் கவனிப்பாரின்றி குப்பைக்கூடைக்குள் போடப்பட்டுவிட்டது. இனிப் பலப்பரீட்சையில் எவர் வெல்லக்கூடும் என்பதைப் பொறுத்ததுமட்டுமே கோரிக்கைகளின் எதிர்காலம் தீர்மானமாகும்.


உள்வந்த வெளிச்சென்ற

வாகன இலக்கங்கள்

13 - 01 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 216
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்: இல்லை.
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்
41-9663, 43-4045.



காவிய நாயகன் கதைகள் கூறிடும் பாடல்கள்

"தளராத துணிவோடு களமாடினான்"

ஆம்! காவியமான எம் மூத்த தளபதி கேணல்கிட்டுவின் பாடல்கள் அடங்கிய பாடல் தொகுப்பு

எழுச்சிப் பாடல்கள் தொகுப்பு- 4-ம் பாகம்

உங்களுக்காக இன்று சகலபத்திரிகை விற்பனையாளர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முந்துங்கள். குறைந்த பிரதிகளே இருப்பில் உள்ளதால் ஏமாற்றங்களை தவிர்த்துக் கொள்ள முந்துங்கள்.

(கி-8375)



இன்று...

ராஜன்ஸ் இசைக்குழுவினர் படைக்கும்

இன்னிசைப் பொங்கல்

ராஜன்ஸ் இசையில் சாந்தன்

மற்றும் தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர்கள் கலந்து கொள்கின்றனர்.

★ இசைச்சுவை ★ நகைச்சுவை
★ ஓர்கன் இசை

இடம்; வேம்படி மகளிர் கல்லூரி
நேரம்; 2. 30, 7 மணி

ஒளி; மனோ லைட்ஸ், ஒலி; நித்தி, றோயல் சவுண்ஸ்.

நிகழ்ச்சி சிறக்க மணிக்குரல் வாழ்த்துகின்றது.

ஒறிஜினல் கொம்பக்ட் டிஸ்க்கில் பாடல் பதிவு செய்யவும் பாடல் பதிவு நிலையங்களுக்கு தேவையான மாஸ்டர் பிரதிகள் மற்றும் நவீன கமெரா மூலம் வீடியோ படப்பிடிப்பிற்கும்—

யாழ். நகரில்—

ஷண் ரெக்கோடிங் ஸ்பொட்

வைரவர் கோவில் அருகில்,
நவீன சந்தை உட்புறம்.

ஃ தற்போது பாடல் பதிவுகள் 3 நாட்களில் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

(7218)


# கல்வி மேம்பாட்டு நிதிய நன்கொடை வைப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்விமேம்பாட்டு நிதிய மாவட்ட மட்ட நன்கொடை வைப்பு விழா இன்று மாலை 3.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்விமேம்பாட்டுபேரவைத் தலைவர் அருட் திரு. பிரான்சிஸ் யோசெப் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் நிதிய விளக்கவுரையை யாழ். வடக்கு வலய பணிப்பாளர் திரு. க.கந்தசாமி வழங்கவுள்ளதுடன் நிதியத்தை யாழ். தெற்கு வலய பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும் ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையினர் கேட்டுள்ளனர்.

## மலத்தியோனுக்குப்

சுகாதார திணைக்களத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## வடக்கு

னாண்டோ அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இவ்வறிக்கை நேற்று வத்திக்கான் வானொலியில் ஒலிபரப்பானது.

அமைதியைக் கொண்டு வருவது மக்களைச் சார்ந்துள்ளது என்பதைப் பொது மக்கள் உணர்ந்து இப்போரை நிறுத்துவதற்கான தங்களின் ஆவலை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அதேவேளை, இம் முயற்சியில் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மக்களுக்கு உதவவேண்டும் என்றும் பேராயர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். பத்து வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்தப் போரினால் 10, 000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 10 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இந்தப் போரினால் அனைவருக்கும் தமது வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் பெரும் கவலை அளிப்பதாகவும் பேராயர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிற்போடப்பட்டது

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கான புதிய கல்வி ஆண்டுக்குரிய மாணவர்களை அனுமதிக்கும் நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எதிர் வரும் 16ஆம் திகதி நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சைகள் அனைத்தும் எதிர் வரும் 22ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று மேற்படி கல்லூரியின் அதிபர் தெரிவித்தார். (க)

## அமைதி

ததே.

ஒரு நாட்டில் அமைதி ஏற்படுவதற்கு வெளிநாட்டவர்களின் உதவி தேவைப்பட்டாலும், அமைதியைக்கொண்டு வருவதற்கு முக்கியபங்காற்ற வேண்டியவர்கள் அந்தநாட்டவர்களே என்பதை இலங்கை அனுபவம் கற்றுத்தந்துள்ளது. எனவும் ஆயர் கூறியுள்ளார்.

## 500 தபால்

பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

மேற்படி கப்பல் தற்போது கொழும்பு துறைமுகத்தில் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதில் 2000 மெற்றிக் தொன் மா, 1000 மெற்றிக் தொன் சீனி ஆகியவை ஏற்றிவரப்படவுள்ளதாகவும், இக் கப்பல் எதிர் வரும் 24-ம் திகதி கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி புறப்படும் எனவும் செயலகத்திற்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## வடமராட்சி

ஊரிக்காடுமலியதனையைச் சேர்ந்த ப. சிறிதரன் (வயது 22) என்ற இளைஞர் கையிலும் நெஞ்சிலும் படுகாயமடைந்தார். வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்ட இவர் பின்னர் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மேலும்சற்கோட்டையைச் சேர்ந்த செ. வசந்தகுமார் (வயது 22), அன்ரன் ஜெயக்குமார் (வயது25), வியாபாரிமூலையைச் சேர்ந்த பொன்னுத்துரை (வயது26), அ. சந்திரகுமார் (வயது 13) ஆகியோர் சிறுசிறு காயங்களுக்கு இலக்காகினர்.

இத்தாக்குதலையடுத்து அல்வாயில் தனபாலசிங்கம், சின்னத்துரை, வியாபாரிமூலையில்வேதாரணியம், முருகுப்பிள்ளை, சின்னையா, புலோலி மேற்கில் விஜயராசா நடராசாசற்கோட்டையில் ஜேசுதாஸ், முனையில் இந்திரலிங்கம் என்போரின் வீடுகளும், மற்றும் சனசமூகநிலையக்கட்டடங்கள் மதில்கள். காரியாலயங்கள் சிலவும் சிறு சேதங்களுக்கு உள்ளாகின.

கடலில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலையடுத்து மீனவர்கள் ஒருவாறு கடல் குதித்து நீந்திக்கரையை வந்தடைந்தனர். தாக்குதல் செய்தவாறு வல்வெட்டித்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படையினர் மீது கடற்புலிகள் எதிர்த்தாக்குதல் தொடுத்ததையடுத்து கடற்படையினர் தூரச்சென்று மறைந்தனர்.

(யோ), (17)


மரண அறிவித்தல்

திருமதி
ஆசைப்பிள்ளை சிவக்கொழுந்து

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசைப்பிள்ளை சிவக்கொழுந்து காலமாகி விட்டார். அன்னார்காலஞ் சென்ற V.K. சிவக்கொழுந்துவின் ; (உரிமையாளர் காலிங்கன் தியேட்டர்) அன்பு மனைவி ஆவார். இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று 14. 01 94 காலை11. 00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவில்.
த. குணநாயகம் (இராசு) மருமகன்

(7226)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.